146

திவ்யார்த்த தீபிகை.

உ.7.1938

J2
ஒ22ன 811,N26
N38·12-11
159931

146

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 AUG 1938
MADRAS

28

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

மாதந்தோறும் வெளிவரும்

ஸ்ரீவைஷ்ணவ ஸமயப்ரகாசந பத்திரிகை.

ஸம்புடம் 12] [நெம்பர் 11.

திவ்யார்த்த தீபிகை.

ஆசிரியர் :

ஸ்ரீகாஞ்சீ. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்.

2—7—1938

விஷயஸூசிகை.

1. திருவாய்மொழி உரை 3 பாரம்.
2. ஆசார்யஹ்ருதயஸாரம் 1 பாரம்.

சென்னை நியூமன் அச்சுக்கூடம்.

விலை அணா 5] 1938 [தபால் சார்ஜ் தனி

இந்த தீபிகை கிடைக்குமிடங்கள் :—

நியூமன் பிரஸ், 19, டேவிட்ஸன் தெரு, ஜி. டி. மதராஸ்.
A. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், 45, மௌபரீஸ் ரோட், மைலாப்பூர்.
C. ரங்கய்ய நாயுடு, 27, சிங்கன்னசெட்டி தெருவு, சிந்தாதிரிப்பேட்டை.

Printed & Published by T. Narayanaswami Naidu at Newman Press, 19, Davidson St., Madras.

146.

ருமோவென்னில், ப்ரஹ்லாதாழ்வானுக்குச் செய்தாலன்றோ பராங்குசநாயகிக்குச் செய்வது. "தாதைஷ வஹ்நிঃ பவநேரிதோபி நமாம் தஹதி, அத்ரஸமந்ததோஹம். பச்யாமி பத்மாஸ்தரணஸ்த்ருதாநி சீதாநி ஸர்வாணி திசாம் முகாநி." என்றானிறே ப்ரஹ்லாதாழ்வான். என்னை நெருப்புச் சுடுகின்றதில்லையே யென்றான்; அது போலேயாயிற்று இதுவும்.

எறியுந் தண்காற்றைத் தழுவி யென்னுடைக் கோவிந்தனென்னும்=வீசுகிற குளிர்ந்த காற்றை, பசுபேய்த்துவிட்டுத் தன்னோடே கலக்கவருகிற க்ருஷ்ணனாகக்கொண்டு தழுவி ப்ரீதியுள்ளடங்காமையாலே என்னுடைய கோவிந்தன் என்கின்றாள்.

வெறிகோள் துழாய்மலர் நாறும்=திருத்துழாய்ப்பரிமளம் கமழ்கின்றது தலைகளிடத்து. பிரிவு நிலைமையில் திருத்துழாய் நறுமணம கமழ ப்ரஸக்தியே தென்னில்; இதற்குமுன் ஸம்ச்லேஷ தசையிலுண்டான பரிமளம் பத்தெட்டு குளிக்கு நிற்குமே. அன்றியும, இரண்டாமடியிற் கூறிபடி, எம்பெருமான் காற்றோடே கலந்து புகுந்து கலவிசெய்ததாகவுங் கூடும்.

வினையுடையாட்டியேன் பெற்ற=நல்வினை யென்றாவது தீவினை யென்றாவது சிறப்பித்துக் கூறவில்லை; ஆயினும் நிர்வேத ப்ரகரணமாகையாலே தீவினையுடையேன் என்றே பொருள்படும்; பட்டாலும், இப்படி பகவத் விஷயத்தில் அவகாஹிக்கும்படியான பெண்ணைப் பெற்றது நல்வினையின் பயனாகவே உள்ளுறக் கருதத்தக்கதாதலால் நல்வினையாட்டியேன் என்பதே உள்ளுறை பொருளாம். உண்மையில் தாயின் நிலைமையும் ஆழ்வார்க்கே உள்ளதாதலால் இவ்வினையுடைமை ஆழ்வார்க்கேயாகும்.

ஒன்றே?—ஒன்றல்ல, பல என்றபடி. ... ... (௫)

ஒன்றியதிங்களைக்காட்டி ஒளிமணிவண்ணனேயென்னும் *
நின்றகுன்றத்தினைநோக்கி நெடுமாலே !வாவென்றுகூவும் *
நன்றுபெய்யும்மழைகாணில் நாரணன்வந்தானென்றாலும் *
என்றினமையல்கள்செய்தார் என்னுடைக்கோமளத்தையே. (௬)

ஒன்றிய } (எல்லாக்கலைகளும்) பொருந்திய

திங்களை காட்டி } பூர்ண சந்திரனை (அருகில் நின்றார்க்குக்) காட்டி

ஒளி மணிவண்ணனே என்னும் } ஒளியையுடைத்தான நீலமணிபோன்ற வடிவையுடையவனே ! என்று கூப்பிடுகிறாள் ;

நின்ற குன்றத்தினை நோக்கி } (அந்தச் சந்திரமண்டலத்தளவும் உயர்ந்து) நிற்கிற மலையைப்பார்த்து (ஸகல உலகங்களையும் அளக்கைக்கு வளர்ந்தருளின எம்பெருமான் என்று நினைத்து)

நெடுமாலே வா என்று கூவும் } 'நெடுமாலே ! வாராய்' என்று அழைக்கிறாள்;

நன்று பெய்யும் மழை காணில் } நன்றாகப்பொழியும் மேகத்தைக்கண்டால்

நாரணன் வந்தான் என்று	நாராயணன் வந்தான் என்று கூறி
ஆலும்	மேகத்தைக்கண்ட மயில் போலே கூத்தாடுகின்றாள்;
என்னுடை கோமளத்தை	மெல்லியலாளான எனது மகளுக்கு
என்று இன மையல்கள்	இப்படிப்பட்ட மயக்கங்களை
செய்தார்	பண்ணினார்.

* * * [ஒன்றிய திங்களை.] எல்லாக்கலைகளும் நிரம்பப்பெற்ற சந்திரனைச் சுட்டிக்காட்டி 'நீலமணிவண்ணனே !' என்று அழைக்கின்றாள். உயரநின்றவொரு மலையைப்பார்த்து, உலகங்களை அளந்தருள்வதற்காக நிமிரவளர்ந்து நிற்கிற ஸர்வேச்வரனென்று கொண்டு 'என் ஆர்த்திதீரவாராய்' என்றழைக்கின்றாள். நன்றாகப் பெய்யும் மேகத்தைக்கண்டால் 'நாராயணன் நம் உறுவுதல் தீர வந்தான்' என்று சொல்லி, மேகத்தைக்கண்டு மயில் கூத்தாடுமாபோலே கூத்தாடுகின்றாள். அந்தோ! இப்படிப்பட்ட வியாமோஹங்களை எனது பெண்பிள்ளைக்கு உண்டுபண்ணிவிட்டாரே ! என் செய்வேன் ! என்கிறாள் திருத்தாய்.

ஒன்றிய என்றது ஸகலகலைகளும் பொருந்தப்பெற்ற என்றபடி. "சந்த்ரமா மநஸோ ஜாத:" என்று புருஷஸூக்தத்தில் சந்திரன் எம்பெருமானுடைய திருவுள்ளத்தில் நின்று தோன்றினதாகச் சொல்லிற்று. "காரணவஸ்துவின் குணங்கள் கார்யவஸ்துவிலே ஸங்க்ரமிக்கும்" என்கிற நியாயப்படி காரணபூதனான எம்பெருமானுடைய குளிர்ச்சியடியாகவே சந்திரனுக்குக் குளிர்ச்சி யுண்டாயிற்றென்று பக்தர்கள் அபிஸந்தி கொள்வதுண்டு; குளிர்ந்த சந்திரனைக் கண்டவாறே குளிர்ந்த திருவுள்ளமுடைய எம்பெருமானாகவே பாவனை செல்லுகின்றது. ஒளிமணிவண்ணனே ! என்று விளியாகவுங்கொள்ளலாம்; ஏகாரத்தை விளியுருபாகக் கொள்ளாமல் பிரிநிலைப் பொருளதாக்கி 'இவன் ஒளி மணிவண்ணனேயன்றி வேறல்லன்' என்பதாகவுங் கொள்ளலாம்.

இரண்டாமடியில் இரண்டு நிர்வாஹங்களுண்டு:—நின்ற குன்றமொன்றுதென்பட்டது; வடிவில் பெருமையைக் கண்டவாறே, ஜகத்தையெல்லாம் தன் திருவடிகளின் கீழே யிட்டுக்கொள்ளும்படி பெரிய வடிவையுடையனான த்ரிவிக்ரம பகவான் என்றெண்ணி, எழுந்தருளாய் என்றழைக்கின்றாள் என்பதாகப் பிள்ளானுடைய நிர்வாஹம்.—மலைபெயராமல் நின்று அடிக்கடி மழைபெய்யப் பெறுவதனால் அழுக்கற்றுப் பசுகு பசுகென்றிருக்குமாறு கண்டு (பராங்குசநாயகி என்ன நினைத்தாளென்னில்;)எம்பெருமான் நெடுநாள் உபேக்ஷித்திருந்த குற்றவாளியாகையாலே உள்ளபடியே வந்துநிற்க வெட்கப்பட்டு, பச்சைப் போர்வையிட்டு முட்டாக்கிட்டு நிற்கிறானாகக்கொண்டு 'சுணைகேடனே! நீ இங்ஙனே வெள்கவேணுமோ? வந்துநில்' என்கிறாள்—என்று நஞ்சீயர் நிர்வஹிக்கும்படி. நஞ்சீயருடைய ஒன்பதினாயிரப்படி ஸ்ரீஸூக்திகள் காண்மின்;—"நின்றதொரு மலையைப்பார்த்து, ஸகல லோகங்களையும் அளக்கைக்கு வளர்ந்தருளின எம்பெருமானென்று கொண்டு என்னார்த்திதீரவாராய் என்று

154931

அழைக்கும். ஸாபராதனாகையாலே கிட்டவர அஞ்சி நிற்கிறானாகக்கொண்டு 'உன்னுடைய ஸ்நேஹாதிசயம் அறியோமோ? வாராய்' என்று க்ஷேபபூர்வகமாக அழைக்கும் என்றுமாம்."

இந்த நிர்வாஹ பேதத்திற்கு நிதானம் ஏதென்னில்; நெடுமால் என்கிற சொல்லேயாகும். மால் என்னுஞ்சொல்லுக்குப் பெருமை, வியாமோஹம் முதலிய பல பொருள்களுண்டு; பெருமையென்னும் பொருளிலே நோக்குவைத்தார் பிள்ளான்; வியாமோஹமென்னும் பொருளிலே நோக்குவைத்தார் நஞ்சீயர்.

நன்றுபெய்யும் மழையைக்கண்டால் நாரணன் வந்தானென்று களிப்பதற்குப் பலவகையான கருத்துக்களுண்டு; "ஒக்குமம்மானுருவமென்று உள்ளங் குழைந்து நாணாளும், தொக்க மேகப் பல்குழாங்கள் காணுந்தோறும் தொலைவன் நான்" என்கிறபடியே மேகத்தைக் காணும்போதே மின்னுமா மழை தவழும் மேகவண்ணனான நாராயணனுடைய ஞாபகம் வந்தேதீரும். "தழைகளுந் தொங்கலும் ததும்பி யெங்குந் தண்ணுமை யெக்கம் மத்தளி தாழ்பீலி, குழல்களும் கீதமுமாகி யெங்குங் கோவிந்தன் வருகின்ற கூட்டங்கண்டு, மழைகொலோ வருகின்றதென்று சொல்லி" [பெரியாழ்வார் திருமொழி 3—4—1] என்கிற பாசுரப்படியும் கொள்ளலாம். "எத்தனையும் வான் மறந்த காலத்தும் பைங்கூழ்கள், மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவை போல், மெய்த்துயர் வீட்டாவிடினும் வித்துவக்கோட்டம்மா! என்சித்த மிகவுன்பாலே வைப்பனடியேனே" [பெருமாள் திருமொழி 5—7.] என்கிறபடியே அநந்யகதிகளால் எதிர்பார்க்கப் படுந்தன்மை மழைக்கும் திருமாலுக்கும் ஒத்துமாதலாலும் மழையைக்கண்டு நாரணன் வந்தானென்று ஆலுதல் அமையும்.

இன மையல்கள்—இப்படிப்பட்ட மயக்கங்கள். இன்ன என்பது 'இன' என்று தொக்கிக் கிடக்கிறது. என்று என்பதற்கு 'என்றைக்கு' என்று பொருளுரைத்தார் பன்னீராயிர வுரைகாரர். ... . (௪)

கோமளவான்கன்றைப்புல்கிக் கோவிந்தன்மேய்த்தனவென்னும் *
போமிளநாகத்தின்பின்போய் அவன்கிடக்கையீதென்னும் *
ஆமளவொன்றுமறியேன் அருவினையாட்டியேன்பெற்ற *
கோமளவல்லியைமாயோன் மால்செய்துசெய்கின்றகூத்தே. (௫)

கோமளம் வான் கன்றை புல்கி	இளையபெரிய கன்றுகளைத் தழுவி
(இவை)	
கோவிந்தன் மேய்த்தன என்னும்	பசுமேய்க்க முடிசூடின கண்ணன் (இனிது உகந்து) மேய்த்தவை என்று கூறுவாள்;
போம் இளம் நாகத்தின் பின் போய்	இஷ்டப்படி ஓடுகின்ற இளைய நாகத்தின் பின்னே (இதுபோனவிடத்தில் அவனையும் காணலாம் என்று நினைத்துச்) சென்று
அவன் கிடக்கை	அவன் பள்ளிகொள்ளும் படுக்கை

ஈது என்னும்	இதுஎன்று சொல்லுவாள்;	மாயோன்	எம்பெருமான்
அரு வினையாட்டியேன் பெற்ற	(அநுபவித்து முடிக்க) அரியபாபத்தையுடையேனான நான்பெற்ற	மால் செய்து	பிச்சேற்றி
கோமளம் வல்லியை	ம்ருதுஸ்வபாவையாய், கொடிபோன்ற இவளை	செய்கின்ற கூத்து	பண்ணுகிற இத்தகைய கூத்தாட்டு
		ஆம் அளவு	எவ்வளவில் ஆகும் என்று
		ஒன்றும் அறியேன்	ஒன்றும் அறிகிலேன்.

* * * [கோமளவான் கன்றை] இங்கு 'ஆன் கன்றை' என்றும் 'வான் கன்றை' என்றும் பிரியும். "ஆண்கன்றை என்று பாடமாகவுமாம்" என்று பன்னீராயிரத்திலுள்ளது. பசுக்களை மேய்ப்பதிற் காட்டிலும் கன்றுகளை மேய்ப்பதில் கண்ணபிரானுக்கு மிக்க ஆவலுண்டு; "தினத்திலும் பசுநிரை மேய்ப்பு உவத்தி செங்கனிவாயெங்களாயர் தேவே" என்று பசுக்கூட்டங்களை மேய்ப்பதில் வெறும் உவப்பு உள்ளதாகச் சொல்லப்பட்டது; "கன்று மேய்த்து இனிது உகந்தகாளாய்" என்று கன்றுகளை மேய்ப்பதில் இனிதுவப்பு உள்ளதாகச் சொல்லப்பட்டது. பிறர்கை பார்த்திருக்கும் அரக்கர்களை ரக்ஷிப்பதிலேயே ஊக்கமுடையவன் எம்பெருமான் என்பது உள்ளுறை பொருள்.

கண்ணபிரான் கன்றுகளை மேய்த்தானென்பதறிந்த பராங்குச நாயகி, தெருவில் திரியும் கன்றுகளைப்பிடித்து அணைத்துக்கொண்டு 'நம் கண்ணபிரான் மேய்த்த கன்றுகள் இவை' என்கின்றாள். இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி:— "கன்றின் கழுத்தைக் கட்டிக்கொண்டவாறே அது துள்ளிப்போகாநிற்குமே; அவன் பரிகரமாயே யிருந்ததென்னும்" என்பதாம். "காற்றில் கடியனாய் ஓடி அகம்புக்கு மாற்றமுந்தாரான்" என்கிறபடியே கைக்கு எட்டாமல் ஓடுகிற தன்மை கண்ணபிரானுக்குப் போலவே கன்றுக்கும் கண்டதனால் "கோவிந்தனுடைய பரிகரமே இவை" என்று திண்ணமாகச் சொல்லுவளென்றபடி. கோமளமென்று இளமைக்கும் மென்மைக்கும் பெயர்; மாணிக்கத்தில் ஒருவகைக்கும் பெயர். ஆன்கன்று என்றால்—பசு ஈன்றகன்று என்றபடி. வான்கன்று என்றால்—திவ்யமான கன்று என்றபடி. கோவிந்தன்—பசுக்களையும் கன்றுகளையும் மேய்த்த பெருமேன்மைக்கு முடிசூடினவன்.

[போம் இளநாகத்தின் இச்யாதி.] ஸர்ப்பம் ஓடக்கண்டால் அஞ்சாதே அதன் பின்னேயோடி 'எம்பெருமானுடைய திருப்பள்ளி மெத்தை இது' என்கின்றாள். "ஐந்து பைந்தலையாடரவணை மேவிப் பாற்கடல் யோகநித்திரை சிந்தைசெய்த வெந்தாய் உன்னைச் சிந்தைசெய்து செய்தே" என்கிறபடியே அவனுடைய சேஷசயன வைபவத்தையே இடைவிடாது சிந்திப்பவராதலால் அதுவே நினைவானபடி. அவனோடே கூடித் தானும் படுக்கலாமென்ற ஆசையோடே நாகத்தின் பின்னே நடந்தாள்போலும்.

"ஆமளவு ஒன்றுமறியேன்" என்பதை உள்ளவிடத்திலேயே அந்வயிக்கவுமாம்; 'மாயோன் அருவினையாட்டியேன் பெற்ற கோமளவல்லியை மால் செய்து செய்கின்ற கூத்து ஆமளவொன்று மறியேன்' என்று அந்வயிக்கவுமாம். முந்தினபக்ஷத்தில், கூத்தே! என்பது 'இப்படியும் ஒரு கூத்து ஆவதே!' என்று முடியும். ... ... (ரு)

கூத்தர்குடமெடுத்தாடில் கோவிந்தனாமெனாவோடும் *
வாய்த்தகுழலோசைகேட்கில் மாயவனென்றுமையாக்கும் *
ஆய்ச்சியர்வெண்ணெய்கள்காணில் அவனுண்டவெண்ணெயீதென்
பேய்ச்சிமுலைசுவைத்தாற்கு என்பெண்கொடியேறியபித்தே!. [னும் *

கூத்தர்	யாரேனும் கூத்தாடுமவர்கள்	வெண்ணெய்கள் காணில்	வெண்ணெயைக் கண்டாளாகில்
குடம் எடுத்து ஆடில்	குடத்தை எடுத்து ஆடினார்களாகில்	அவன் உண்ட வெண்ணெய் ஈது என்னும்	அவன் அமுது செய்தருளின வெண்ணெய் இது என்கிறாள்;
கோவிந்தன் ஆம் எனா ஓடும்	(குடக்கூத்தாடுதலை ஸ்வபாவமாகவுடைய) க்ருஷ்ணன் ஆம் என்று கருதி (காண்கைக்கு) ஓடுவாள்;	பேய்ச்சி முலை சுவைத்தாற்கு	பூதனையினுடைய முலையை ப்ராணனோடே சுவைத்து முடித்த கண்ணபிரானுக்கு
வாய்த்த குழல் ஓசை கேட்கில்	இனிய குழலின் ஓசையைக் கேட்டாளாகில்	கொடி என் பெண்	கொடிபோன்றவளான என்னுடைய மகள்
மாயவன் என்று	க்ருஷ்ணன் என்று நினைத்து	ஏறிய	தலை மண்டையிடும்படி கொண்ட
மையாக்கும்	மோஹியா நிற்பாள்;	பித்து	பிச்சு இருந்தபடி
ஆய்ச்சியர்	இடைச்சிகள் கையிலே	ஏ	ஆச்சரியம்.

* * * [கூத்தர் குடம்.] ஜீவனத்திற்காகக் குடக்கூத்தாடித் திரிகிறவர்களுண்டே; அவர்கள்வந்து குடங்களை வீசியெறிந்து ஆடுமதுகண்டால்*குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்ல கோவாகிய கோவிந்தனே ஆடுவதாக ப்ரதிபத்தி பண்ணி அதனை அருகேயிருந்து காண ஓடுகின்றாள். எப்படிப்பட்டவர்களையும் ஈடுபடுத்தவல்ல புல்லாங்குழலின் இசைவந்து செவிப்பட்டால், கண்ணபிரானென்று சொல்லி வியாமோஹிக்கின்றாள். இடைச்சிகள் கொணர்ந்து விற்கும் வெண்ணெயைக் கண்டால், அன்று அவன் திருவாய்ப்பாடியில் களவுகண்டு அமுதுசெய்த வெண்ணெயோடொத்த வெண்ணெய் இது என்று சொல்லாநின்றாள்; தாய் உதவாத தனிமையிலே பூதனையென்பவள் தாய்வடிவுகொண்டு வந்து நலியப்புக, அவளை முடித்துத் தன்னைச் சேமமாகத் தந்த உபகாரத்துக்குத் தோற்று இவள் பித்தேறினளாயிற்று; இப்படியும் ஒருவிலக்ஷணமான பிச்சுஉண்டோவென்கிறாள் திருத்தாய்.

குடமெடுத்தாடில் என்கையாலே, ஸாதாரணமான கூத்துக்களைப்பொருள் படுத்தாள்; குடக்கூத் தொன்றிலேயே ஈடுபடுவாளென்பது பெறப்பட்டது. அந்தணர்க்குச் செல்வம் விஞ்சினால் யாகம்செய்யுமாபோலே இடையர்க்குச் செல்வம் விஞ்சினால் களிப்புக்குப் போக்குவீடாகக் குடக் கூத்தாடுவர்கள்

என்று ப்ரஸித்தி. கண்ணபிரானும் ஜாதிமெய்ப்பாட்டுக்காகக் குடக்கூத்தாடினனும்; அதில் ஆழ்வார்கள் மிக ஈடுபடுவர்கள். "நீரார் கமலம்போல் செங்கண்மாலென்றொருவன், பாரோர்களெல்லாம் மகிழப்பறைகறங்கச், சீரார் குடமிரண்டேந்திச், செழுந்தெருவே ஆரார்ரெனச் சொல்லியாடுமதுகண்டு, ஏராரிளமுலையாரன்னையரு மெல்லாரும், வாராயோ வென்றார்க்குச் சென்றேனென் வல்வினையால்" என்று தொடங்கியுள்ள சிறிய திருமடற் பாசுரம் காண்க.

குடக்கூத்தாடுமது கண்டு கோவிந்தன் என்று சொல்லி ஓடினளாம்;- யாரோ வயிற்றுப்பிழைப்புக்காக ஆடித்திரிகிறார்களத்தனை; கண்ணனல்லன்' என்று விவேகிகள் கூறினால் 'கோவிந்தனும்' என்று சொல்லி ஓடினளாம். 'கோவிந்தனேகிடீர்; திண்ணமாக நானறிவேன்' என்றவாறு.

வாய்த்த குழலோசை இத்யாதி. கண்ணபிரானுடைய வேணுகானச் சிறப்பு பெரியாழ்வார் திருமொழியில் * நாவலம் பெரிய தீவினில் வாழும் * என்கிற பதிகத்திலும், ஸ்ரீரங்கராஜஸ்தவ—உத்தரசதகத்தில் "ஜௌஜ்ஜ்வல்ய ஜலாம்பூவ—சைலோக்திச் ச ஜலாம்பபூவ" இத்தியாதிச்லோகத்திலும் பரக்கக் காணத்தக்கது.

மாயவனேன்று—'மாயவனை கண்ணன் ஊதுகிறகுழலின் ஓசையென்று' என்று பொருள் கொள்வது தவிர 'மாயவனை கண்ணனேயென்று' என்கிற பொருளும் கொள்ளத்தகும். கீழே * புகழுநல்லொருவனில் "நுடங்கு கேள்வியிசை யென்கோ" என்றருளிச் செய்திருக்கையாலே எம்பெருமான் றன்னையே ஸங்கீதமாகக் கொள்ளுகிற புடையுமுண்டிறே; குழலோசையை எம்பெருமானுகவே பிரதிபத்தி பண்ணு நின்றுளென்றபடி. கண்ணனுடைய குழலோசையாக நினைத்து மோஹிக்கின்றுளென்ற பொருளில் மாயவன் என்ற சொற்சுவையில் நோக்காக நம்பிள்ளை அருளிச்செய்யும் அர்த்தம் மிக அழகியது; அதாவது— சில கோபிமார்களுடனே கலந்து பிரிந்தால் அத்தலையில் பிரணய ரோஷம் தலையெடுத்திருக்கும்; மீண்டும் அவர்களோடு கலக்க நினைக்கும்போது அந்த ஊடலை ஆற்றவேண்டிச் சில தாழ்ந்த சொற்களைக் குழலிலேயிட்டுப் பாடிக்கொண்டே செல்வனும்;' பகலெல்லாம் பசுக்களின் பின்னே போனேன்; தாய் தந்தையர்க்குப் பரதந்திரனுயிருந்தேன்; பிரிந்தேன்; தரிக்கமாட்டிற்றிலேன்; ஒருபகல் ஆயிர மூழியாய்ச்செல்லா நின்றது, என்றிங்ஙனே பாசுரங்களை உள்ளே யிசைத்துப் பாடுவதுண்டு; அது தோன்ற மாயவன் என்றதாக.

மையாத்தல்—மோஹித்தல்.

"ஆய்ச்சியர் வெண்ணெய்" என்ற விடத்து, பிராமண ஸ்த்ரீகள்கடைந்து திரட்டிய வெண்ணெய்கண்டால் ஒன்றும் பேசாள்; இடைச்சிகள் கையில் முடை நாற்றம் பெற்ற வெண்ணெய் கண்டால்—என்று இன்சுவைப் பொருளுரைப்பர் நம்பிள்ளை.

அவனுண்ட வெண்ணெய் ஈதேன்னும் — கண்ணபிரான் அக்காலத்து அமுதுசெய்த வெண்ணெய் இப்போது காணமுடியாததலால், அவனுண்ட வெண்ணெயோடு ஸஜாதீயமான வெண்ணெய் என்றபடி.

முன்னடிகளில் கோவிந்தன், மாயவன் என்று திருநாமங்களைச் சொன்னதுபோலே இங்கும் [மூன்றுமடியிலும்] ஒரு திருநாமம் சொல்லலாமாயிருக்க அது சொல்லாது அவன் என்றது—வெண்ணெயுண்ண அவன் பட்டபாடுகளையெல்லாம் உளப்படுத்தியவாறு. "வாரார் வனமுலையாள் மத்தாரப்பற்றிக்கொண்டு, ஏராரிடைநோவ எத்தனையோர் போதுமாய், சீரார் தயிர்கடைந்து வெண்ணெய் திரண்டதனை, வேரார் நுதல் மடவாள் வேறோர் கலத்திட்டு, நாரார் உறி யேற்றி நன்கமைய வைத்ததனைப், போரார் வேற்கண் மடவாள் போந்தனையும் பொய்யுறக்கம், ஓராதவன் போலுறங்கியறிவுற்றுத், தாரார் தடந்தோள்களுள்ளளவுங் கைநீட்டி, ஆராத வெண்ணெய் விழுங்கி" (சிறிய திருமடல்) இத்யாதி.

ஈற்றடிக்கு நம்பிள்ளையீடு;—"இவள் இப்படிக்கலங்குகைக்கு நிதானமென்னென்னில்; [பேய்ச்சி முலை சுவைத்ததாற்கு.] அவன் முன்பே யொரு உபகாரத்தைப் பண்ணிவைத்தான்; அதிலே தோற்றவன்று தொடங்கி இவள் பிச்சேறத் தொடங்கினாள். தாயுங்கூட உதவாத ஸமயத்திலே பூதனைவந்து முலைகொடுக்க, அவ்வளவிலே உணர்த்தியுண்டாய் அவளை முடித்துத் தன்னை நோக்கித் தந்தானே; அவ்வுபகாரத்திலே தோற்று அன்று தொடங்கி இவள் பிச்சேறினாள்.—பூத்தருபுணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி என்றிவை புணர்ச்சிக்கு ஹேது. அதாவது—எட்டாத கொம்பிலே நின்றதொரு பூவை ஆசைப்பட்டால் இவன் தன்னைப் பேணுதே இவளாசையை முடித்துக்கொடுக்க 'இவன் தன்னைப் பேணுதே நம் நினைவை முடித்தானே' என்று அதுக்காகத் தன்னைக்கொடுக்கை பூத்தரு புணர்ச்சி. ஆற்றிலே அழுந்துகிறவளைத் தான் புக்கேறவிட, அதற்காகத் தன்னைக் கொடுக்கை புனல்தரு புணர்ச்சி. அசிந்திதமாக ஆனையின்கையிலே அகப்பட்டவளை மீட்டுக்கொடுக்க, அதுக்காகத் தன்னைக்கொடுக்கை களிறுதரு புணர்ச்சி. இவை யொன்றுமல்ல; அவன் தன்னை நோக்கினதுக்கு இவள் தன்னை யெழுதிக்கொடுக்கிறாள்." * * * (சு)

ஏறியபித்திஞேடு எல்லாவுலகுகண்ணன்படைப்பென்னும் *
நீறுசெவ்வேயிடக்காணில் நெடுமாலடியாரென்றோடும் *
நாறுதுழாய்மலர்காணில் நாரணன்கண்ணியீதென்னும் *
தேறியுந்தேறுதும்மாயோன் திறத்தனளேயித்திருவே. (எ)

ஏறிய பித்தினோடு	மிகுந்த மயக்கத்தோடே கூடியிருக்கச் செய்தே (வேதாந்த வித்துக்கள் சொல்லுமாபோல)	கண்ணன் படைப்பு என்னும்	க்ருஷ்ணனுடையஸ்ருஷ்டியென்று கூறுகிறாள்
எல்லா உலகு	ஸகலலோகங்களும்	நீறு செவ்வே இட காணில்	பஸ்மத்தை மேல்நோக்கி இடக்கண்டாளாகில்

நெடுமால் அடியார் என்று ஓடும்	ஸர்வேச்வரனுடைய அடியார் என்று கொண்டு (அவர்களைத் தொடர்ந்து) ஓடுகிருள் ;	தேறியும் தேறாதும்	தேறினவளவிலும் கலங்கினவளவிலும்
நாறு துழாய் மலர் காணில்	பரிமளம் வீசும் திருத்துழாயின் பூந்தாரைக் கண்டாளாகில்	இத் திரு	திருமகள் போல்வாளான இப்பெண்பிள்ளை
நாரணன் கண்ணி ஈது என்னும்	ஸர்வஸ்வாமியான நாராயணனுடைய மாலை இது என்கிருள் ;	மாயோன் திறத்தினள்	எம்பெருமான் விஷயமல்லது வேறொன்றறியாள்.

* * * [ஏறியபித்திஞெடு.] "என்பெண்கொடி. யேறியபித்தே" என்று கீழ்ப் பாட்டில் தலைக்கட்டிற்று. உலகில் பித்துக்கொள்ளிகளாயிருக்குமவர்கள் வாயில் வந்தபடி எதையேனும் தப்புந்தவறுமாய்ப் பேசுவதுண்டே; அப்படி இவள் ஏதேனும் பேசுகின்ருளோ என்ன; பித்தேறின நிலைமையிலும் பகவத்விஷயத்தில் தெளிவு சிறிதும் மாறிற்றில்லை யென்கிருள். பராசரமஹர்ஷி முதலானோர் தெளிந்திருந்து என்ன வார்த்தை சொல்லுவர்களோ அந்தவார்த்தை இவள் சொல்லுகின்ருள் காண்மின். "பராசரம் முநிவரம் க்ருதபௌர்வாஹ்நிகக்ரியம்। மைத்ரேய: பரிபப்ரச்ச ப்ரணிபத்யாபிவாத்ய ச—பராசரம்முனிவரம் க்ருதபௌர்வாஹ்நிகக்ரியம், மைத்ரேய: பரிபப்ரச்ச ப்ரணிபத்யாபிவாத்ய ச" என்கிறபடியே வணங்கி வழிபட்டுக் கேள்விகேட்ட மைத்ரேய பகவானுக்கு, நற்றெளிவு கொண்டிருந்த பராசர பகவான் "விஷ்ணோ: ஸகாசாதுத்பூதம் ஜகத் தத்ரைவ ச ஸ்திதம்। ஸ்திதிஸம்யமகர்த்தாஸௌ ஜகதோஸ்ய ஜகச்ச ஸ:—விஷ்ணோஸ் ஸகாசாத் உத்பூதம் ஜகத் தத்ரைவ ச ஸ்திதம். ஸ்திதி ஸம்யமகர்த்தாஸௌ ஜகதோஸ்ய ஜகச்ச ஸ:." என்று உபதேசித்த அரும்பெரும் பொருளை இவள் பித்துக்கொண்டிருக்கிற நிலையிலே அவலீலையாக எடுத்துரைக்கின்ருளாயிற்று. நன்கு வேதமோதிய அந்தணன் பித்தேறினுலும் வேதவாக்கியங்களையே சொல்லித் திரியுமாபோலே இவளும் வாஸநாபலத்தாலே பகவத் விஷயமல்லது பேசாளென்கை.

நீறு செவ்வேயிடக்காணில் நெடுமாலடியாரென்றேடும்=திருமாலடியார்களுக்கு பஸ்மதாரணம் சாஸ்த்ர நிஷித்தம் என்னுமிடம் ஆழ்வாரறியாததன்று; நீறு இடுமவர்களை நெடுமாலடியாரென்று பிரதிபத்தி பண்ண ப்ரஸக்தியில்லை; அப்படியிருக்க இங்கு அருளிச்செய்வதற்குக் கருத்தென்னென்னில்; "த்ரவ்யம் ஏதேனுமாகிலும் ஊர்த்த்வமாக இடக்காணில் நெடுமாலடியாரென்றேடும்." என்பது ஆறாயிரப்படி யருளிச்செயல். இதனை அடியொற்றியே மற்ற வியாக்கியானங்களுமுள்ளன. பஸ்மதாரணம் பண்ணினவர்களேயாயினும் அந்த பஸ்மத்தைக் குறுக்கே பூசாதே நெடுக இட்டால் 'ஊர்த்த்வபுண்ட்ரதாரிகளிவர்கள்' என்று அவ்வளவுக்காக ப்ரதிபத்தி பண்ணுமென்றபடி.

ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் அருளிச்செய்த ஸச்சரித்ரரக்ஷையில் ஊர்த்வபுண்ட்ரதாரண விதிப்பகுதியில்—"[illegible]

[illegible]" என்று தொடங்கி அருளிச்செய்யப்பட்டிருக்கும் விஷயங்களும் குறிக்கொள்ளத்தக்கவை. (அவற்றின் சுருக்கம் வருமாறு:—) ஸகல பாகவதர்களாலும் சிரமேற் கொள்ளப்பட்ட தமிழ் வேதமாகிய திருவாய்மொழியில் 'நீறு செவ்வேயிடக் காணில் நெடுமாலடியாரென்றேடும்' என்கிற பாசுரத்தினுல் பகவத் பக்தர்களுக்கு பஸ்மதாரணம் லக்ஷணம்போல் தெரிவிக்கப்பட்டிருக்கிறதே, இது எப்படி? என்று ஆக்ஷேபித்துக்கொண்டு சில ஸமாதானங்கள் அருளிச் செய்யப்பட்டுள்ளன. கீழே நாம் காட்டியவகையிலே ஒரு ஸமாதானம். மற்றொரு ஸமாதானமாவது—நீறு என்னுஞ் சொல் பஸ்மத்தையே சொல்லும் என்கிற நியதியில்லை, ஆழ்வார்தாமே "மாயன் தமரடி நீறு கொண்டு அணியமுயலில்" என்று வேறோரிடத்தில் அருளிச்செய்திருக்கையாலே பாகவதர்களின் திருவடிப் பொடியையும் பொருளாகக்கொள்ளலா மென்பதாம்.

பஸ்மதாரணம் பண்ணுகிறவர்கள் குறுக்கே பூசக் காண்பதொழிய ஊர்த்வமாக இடுவதுமுண்டோவென்று சிலர் முற்காலத்திலேயே சங்கித்தார்கள்; அதற்குப் பரிஹாரமும் நம்பிள்ளை யருளிச்செய்தார். ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"அவர்கள் செவ்வேயிடுவர்களோ வென்னில், அதுவுமன்றிக்கே இதுவுமன்றிக்கே மசகப்ராயரா யிருப்பார்கள் தரிப்பர்களிறே." (அதாவது)இரண்டுங்கெட்டான் என்று சொல்லப்படுகிற சிலர் பஸ்மத்தையே ஊர்த்வபுண்ட்ரமாகவும் தரிப்பர்களென்றபடி.

[நாறுதுழாய் இத்யாதி.] நறுமணம் மிக்க திருத்துழாயைக் கண்டால், என் நாயன் * தோளிணைமேலும் நன் மார்பின்மேலும் சுடர்முடி மேலும் தாளிணைமேலும் புனையுந் தண்ணந்துழாய் இது என்கின்ருள்.

பலசொல்லி என்? பித்துக்கொள்ளாமலிருக்கிற காலத்தோடு பித்துக்கொண்டிருக்கிற காலத்தோடு வாசியற என்மகள் பகவத்விஷயமான வார்த்தைகளில் தெளிவுபெற்றே யிருக்கின்ருளென்கிறது ஈற்றடி. "இத் திரு" என்றதனுல் இப்பராங்குச நாயகி ஸ்ரீமஹாலக்ஷ்மியின் அம்சம் என்பது தெரிவிக்கப்படுகிறது. இதைப்பற்றின விவரணம் ஆசார்ய ஹ்ருதயத்தில் (இரண்டாம் ப்ரகரணத்தில்) "இராவணனில் நடுவாகக் குழைத்தவன்" என்கிற சூர்ணையிலும், "இத்திரு மண்ணோரன்ன வொண்ணுதல் பின்னைகொலென்கிறவொப்பு" என்கிற சூர்ணையிலும் காணத்தக்கது. * * * * * * * (எ)

திருவுடைமன்னரைக்காணில் திருமாலைக்கண்டேனேயென்னும் *
உருவுடைவண்ணங்கள்காணில் உலகளந்தானென்றுதுள்ளும் *
கருவுடைத்தேவில்களெல்லாம் கடல்வண்ணன்கோயிலேயென்னும் *
வெருவிலும்வீழ்விலுமோவாக் கண்ணன்கழல்கள்விரும்புமே. (அ)

திரு உடை	பூர்ணமான செல்வத்தை யுடைய
மன்னரை காணில்	அரசர்களைக் கண்டால்
திரு மாலை	திருமகள் கொழுநனை எம்பெருமானை
கண்டேனே என்னும்	கண்டேனே! என்று கூறுவாள்;
உரு உடை	விலக்ஷண வடிவங்களை யுடைய
வண்ணங்கள் காணில்	(காயாம்பூ முதலிய) பதார்த்தங்களைக் கண்டால்
உலகளந்தான் என்று துள்ளும்	(இச்செவ்வியுள்ளது) திருவுலகளந்தருளின எம்பெருமானுக்கு' என அத்யவஸித்து ப்ரீதியோடே ஆடுவாள்;
கரு உடை	விக்ரஹயுக்தமான
தேவு இல்கள் எல்லாம்	தேவாலயங்கள் யாவும்
கடல் வண்ணன் கோயிலே என்னும்	எம்பெருமான் (எழுந்தருளியுள்ள) கோவில்களே என்று கூறுவாள்
வெருவிலும் வீழ்விலும்	அஞ்சினபோதும் (ஆர்த்தியாலே) மோஹித்த போதும்
ஓவாள்	ஒழியாதவளாகி
கண்ணன் கழல்கள் விரும்பும்	க்ருஷ்ணன் திருவடிகளையே பேணா நின்றாள்.

* * * [திருவுடை மன்னரை.] செல்வம் மிக்க அரசர்களைக் கண்டால் திருமாலைக்கண்டதாகவே சொல்லுவளாம். ஏனென்னில்; "நாவிஷ்ணு: ப்ருதிவீபதி: நாவிஷ்ணு: ப்ருதிவீபதி:" என்று சாஸ்த்ரம் கூறுகின்றது; விஷ்ணுவின் அம்ஸமில்லாமல் அரசனாக அமைய முடியாதென்பது இந்த ப்ரமாணத்தின் கருத்து. பூதத்தாழ்வார் தமது திருவந்தாதியில்—"கோவாகி மாநிலங்காத்து நங்கண் முகப்பே, மாவேகிச் செல்கின்ற மன்னவரும்—பூமேவுஞ் செங்கமல நாவியான் சேவடிக்கே யேழ்பிறப்பும், தண்கமல மேய்ந்தார் தமர்." என்றருளிச்செய்கிறார். பலகாலம் பகவானை ஆராதித்து அதன்பலனாகவே அரசர்களாகிச் சீரிய சிங்காசனம் ஏறுகின்றார்களென்கை.

இங்கே சில ஐதிஹ்யங்கள் ஈட்டில் அருளிச் செய்யப்படுகின்றன. அரசன் ஸாமந்தன் தலையிலே அடியிட்டு ஆனைக்கழுத்திலே ஏறும்போது நாதமுனிகள் கண்டு "ஸர்வேச்வரன் ப்ரஹ்மாதிகள் தலையிலே அடியிட்டுப் பெரியதிருவடியின் மீது ஏறும்படி இதுவன்றோ" என்றுசொல்லி மோஹித்தாராம். ஒருராஜாவைக் கண்டு அவன்பின்னே தொடர்ந்து போனார் என்று முண்டு.

உருவுடை வண்ணங்கள் காணில் உலகளந்தானென்று துள்ளும்=விலக்ஷணரூபங்களையுடைய பதார்த்தங்களைக் கண்டால் (அதாவது, நீலம் குவளை காயா முதலிய உருவழகிய பொருள்களைக் கண்டால் 'உலகளந்த என்னையன்' என்று சொல்லித் துள்ளுகின்றாள்.

[கருவுடை யித்யாதி.] கல்புதைத்துக் கிடக்கும் ஸ்தானங்களைக்கண்டால் அவையெல்லாம் பெரிய பெருமாள் பள்ளிகொண்டருளுகிற கோயிலே யென்று சொல்லுகின்றாள். எந்த ப்ரதிமையிலும் எம்பெருமானுடைய ஆவேஸம் இருந்தே தீருமென்பது கருத்து. நாலுபேர் கையெடுத்துக்கும்பிட வேண்டும்படியிருக்குமிடம் எதுவானாலும் அங்கு எம்பெருமானுடைய ஸாந்நித்யம் உண்டாகியே யிருக்குமென்க. இங்குக் கடல்வண்ணன் என்றதனால் "ஆகாஶாத் பதிதம் தோயம் யதா கச்சதி ஸர்வதேவநமஸ்கார: கேஶவம் ப்ரதி கச்சதி—ஆகாசாத் பதிதம் தோயம் யதா கச்சதி ஸாகரம். ஸர்வதேவநமஸ்கார: கேஸவம் ப்ரதி கச்சதி." என்கிற ஸுப்ரஸித்த ச்லோகம் நினைவுக்கு வருகின்றது. எந்தத் தண்ணீரும் கடலிலேபோய்ப் புகுமாபோலே எந்தத் தெய்வத்தைப் பற்றின நமஸ்காரமும் கடல் வண்ணனிடத்தே போய்ச் சேருமென்பது மேலெடுத்த வசனத்தின் கருத்து.

வெருவிலும் வீழ்விலும் = வெருவுதலாவது அஞ்சுதல்; வீழ்தலாவது மோஹித்தல். தெளிவோடே கூடியிருந்து பந்துக்களைக்கண்டு அஞ்சி யிருக்கும் போதும், அறிவழிந்து மோஹித்துக் கிடக்கும்போதும் இடைவிடாதே கண்ணன் கழல்களில் விருப்பமே இவளுக்குச்செல்லா நின்றது என்றதாயிற்று. (அ)

விரும்பிப்பகவரைக்காணில் வியலிடமுண்டானேயென்னும் *
கருர்பெருமேகங்கள்காணில் கண்ணனென்றேறப்பறக்கும் *
பெரும்புலவாநிரைகாணில் பிரானுளனென்றுபின்செல்லும் *
அரும்பெறல்பெண்ணினைமாயோன் அலற்றியயர்ப்பிக்கின்றனே. (கூ)

பகவரை காணில்	ஸந்நியாஸிகளை கண்டால்
விரும்பி	ஆதரவு கொண்டு பேணி
வியல் இடம் உண்டானே என்னும்	அகன்ற உலகத்தை ப்ரளயாபத்திலே உண்டு திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்த ஸர்வரக்ஷகனே என்பாள்;
கரு பெரு மேகங்கள் காணில்	கறுத்துப்பெருத்த மேகங்களைக் கண்டால்
கண்ணன் என்று	கண்ணபிரான் என்று நினைத்து
ஏற பறக்கும்	(அங்கே செல்ல) மேலே யெழுந்து பரப்பதற்கு அலமரா நிற்பாள்;
பெரு புலம் ஆநிரை காணில்	பருத்து அழகிய பசுக்களைக் கண்டால்
பிரான்	(அவற்றை மேய்த்து ரக்ஷிப்பவனான) உபகாரகன்
உளன் என்று	கூட வருகிறான் என்று நினைத்து
பின் செல்லும்	அப்பசுக்களின் பின்னே போகிறாள்;
பெறல் அரு பெண்ணினை	பெறுதற்கு அரியளான இப் பெண்ணை
மாயோன்	எம்பெருமான்
அலற்றி	வாய்விட்டு அலறும்படி பண்ணி
அயர்ப்பிக்கின்றான்	(அதற்குமேலே)மோஹிக்கும்படிபண்ணுகிறான்.

* * * [விரும்பிப் பகவரை.] பகவர் என்றது பரமைகாந்திகள் என்றபடி. ஜ்ஞாநாநுஷ்டான பரிபூர்ணர்களான உத்தமாச்ரமிகள் என்று கொள்க. பகவானைச் சொல்லுகிற சொல்லையிட்டே அவர்களைக் கூறினது—அவர்கள் பகவானில் வேறுபடாதவர்கள் என்பதைக் காட்டுதற்கென்க.

அப்படிப்பட்டவர்களைக் கண்டால், உலகங்களையெல்லாம் திருவயிற்றிலே வைத்து நோக்கின பெருமானாகவே பிரதிபத்தி பண்ணுவள். *ஜ்ஞாநீது ஆத்மைவ மே மதம் * என்கிற பகவத்கீதையிலே நோக்குப்போலும்.

கரும்பெரு மேகங்கள் காணில்=கறுத்துப் பெருத்து விடாய்தீர்க்குமதான மேகத்தைக் கண்டவாறே அப்படிப்பட்ட வடிவையுடையனான கண்ணபிரான் தானே வந்து தோன்றினானாகக்கொண்டு கோலாஹலங்கள் செய்யா நிற்பள். இங்கே ஒரு இதிஹாஸம் ஈட்டில் அருளிச்செய்யப்படுகிறது:—ராஜேந்த்ரசோழன் என்னும் ஊரில் திருவாய்க்குலத்தாழ்வார் என்று ஒருவரிருந்தாராம்; அவர் கார்காலத்திலே பயிர் பார்க்கவென்று புறப்பட்டு வயலருகிற் சென்றவாறே மேகத்தைக் கண்டு மோஹித்து விழுந்தாராம்; இவர் விழுந்ததைக் கண்டு நின்ற குடிமகன் ஓடிவந்து அவரை யெடுத்துக்கொண்டு வந்து க்ருஹத்திலேவிட்டு 'இவருடைய ப்ரக்ருதியை அறிந்திருந்தும் இந்நாளிலே இவரை வயல் பார்க்கப் புறப்படவிடலாமோ?' என்றானாம். மேகத்தைக் கண்டு பகவானாகவே யெண்ணி மோஹித்துவிழுதல் பக்தர்களுக்கு உள்ளதென்று இதனால் விளங்கிற்று.

பெரும்புலவாநிரை காணில் பிரானுளனென்று பின் செல்லும்=பசுக்கூட்டங்கள் வயல்களிலே மேய்ந்துவிட்டு மாலைப்போதிலே மீண்டு ஊர்க்குள்ளே புகுதல் எங்குமுண்டே; அத்தகைய திரளைக் கண்டால், * கன்றுகள் மேய்த்துத் தன்தோழரோடு கலந்து தழைகளுந் தொங்கலும் ததும்பி யெங்குந் தண்ணுமை யெக்கம் மத்தளி தாழ்பீலிக் குழல்களுங் கீதமுமாகி யெங்குங் கோவிந்தன் வருகின்ற கூட்டமாகவே யெண்ணி, முன்னணியிலே கண்ணனைக் காணாமல் பிற்குழையிலே அவன் எழுந்தருளக் கூடுமென்று கருதிப் பின்னாலேசென்று பார்க்கின்றாள். இப்பசுக்களின் கோஷ்டிக்குள்ளே கண்ணபிரான் இருக்கக்கூடுமென்று நினைத்து, எப்படியும் அவனைக் காணவேணுமென்று கருதி அவற்றைத் தொடர்ந்துகொண்டே செல்லாநின்றாள் என்றுமாம்.

புலம் என்றது இந்திரியங்களை அபஹரிக்குமதான என்றபடி: அழகிய என்பது தேர்ந்தபொருள்.

எப்போதும் தன்னையே வாய் வெருவும்படியாகவும் மோஹிக்கும்படியாகவும் இப்படி எம்பெருமான் செய்துவிட்டானே! என்கிறாள் ஈற்றடியில். ஆழ்வார் இவ்வுலகில் திருவவதரித்தது மிக்க தவப்பயன் என்பது அரும்பெறல் பெண்ணினை என்பதனால் தெரிவிக்கப்பட்டது. "அருவினையேன் நெடுங்காலமும் கண்ணன் நீண்மலர்ப்பாதம் பரவிப்பெற்ற" என்ற திருவிருத்தமும் இங்கு அநுஸந்தேயம். .... (கூ)

அயர்க்கும்சுற்றும்பற்றிநோக்கும் அகலவேநீணோக்குக்கொள்ளும் *
வியர்க்கும்மழைக்கண்துளும்ப வெவ்வுயிர்க்கொள்ளும்மெய்சோரும் *
பெயர்த்தும்கண்ணாவென்றுபேசும் பெருமானே! வாவென்றுகூவும் *
மய ல்பெருங்காதலென்பேதைக்கு என்செய்கேன்? வல்வினையேனே.

அயர்க்கும்	மோஹியா நிற்பள்;
சுற்றும் பற்றி நோக்கும்	(கண்ணன் தன்னிடத்து வாராதொழியான் என்று நினைத்து அவன் வருகையை) சுற்றிலும் பலகாலும் பார்ப்பள்;
(அவ்வளவிலும் காணாமையினாலே அவன் தூரத்திலே நிற்கிறானாகவெண்ணி)	
அகல நீள் நோக்கு கொள்ளும்	பார்த்த கண்ணை ஓட்டி நெடும்போது பாரா நிற்பள்;
(அங்கும் காணாமையினாலே)	
வியர்க்கும்	வேர்த்து நீராக நிற்கும்;
மழை கண் துளும்ப	மழைபோலக் கண்களில் நீர் துளும்பும்படி
வெம்	வெவ்விதாக
உயிர்க்கொள்ளும்	நெடுமூச்செறிகின்றாள்;
மெய் சோரும்	(இத்தகைய பரிதாபத்தாலே) சரீரம் தரிக்கமாட்டாமல் வாடுவாள்;
பெயர்த்தும்	பின்னையும் (ஆசைமிகுதியினாலே)
கண்ணா என்று பேசும்	க்ருஷ்ணனே! என்று கூப்பிடுவாள்;
(அவ்வளவிலே வந்தானாகவெண்ணி)	
பெருமானே	என்னுடையஸ்வாமியே!
வா என்று கூவும்	வரலாகாதோ? என்று அழைப்பாள்;
மயல்	(இப்படிப்) பிச்சேறும்படி
பெரு காதல்	பெரிய காதலையுடையவளான
என் பேதைக்கு	என் சொற் கேளாப் பெண்ணுக்கு
வல்வினையேன்	(இவளை இப்படிக் காணும்படி) கொடிய பாபத்தையுடைய நான்
என் செய்கேன்	என்ன செய்வேன்.?

* * * [அயர்க்கும் சுற்றும்.] பராங்குசநாயகியின் பலவகைப்பட்ட நிலைமைகளை யெடுத்துரைக்கின்றாள் திருத்தாய். அயர்க்கும்=சிலகாலங்களிலே அறிவழிந்து கிடக்கின்றாள். சுற்றும் பற்றிநோக்கும்—சிலகாலங்களிலே அறிவு குடிபுகுந்திருந்து, தனக்குக் காட்சி தருவதற்காக எம்பெருமான் அருகே வந்திருந்தானாகக்கொண்டு மிக்க ஆவலுடனே சுற்றும் நோக்குகின்றாள். அகலவே நீள் நோக்குக்கொள்ளும்—சுற்றும் பார்த்தும் காணாதொழிந்தவாறே, "பரமபதத்தில் நின்றும் இப்போதே புறப்பட்டிருக்கக் கூடும்; அங்கிருந்து எழுந்தருளுகிற அழகைக் காண்போம்" என்று நெடுந்தூரத்திலே கண்ணைவிட்டுப் பாராநின்றாள். வியர்க்கும்=அங்குங் காணப்பெறாமையாலே இளைப்பாலே வியர்வை மிகும். [மழைக்கண் இத்யாதி.] வேர்வையாய்ப் புறப்பட்டதுபோக மிகுந்தது கண்ணீராய்ப் புறப்படும்; அதிலும் மிகுந்தது நெடு மூச்சாய்ப் புறப்படும். அந்த பரிதாபத்தாலே சரீரம் தரிக்கமாட்டாமல் சோரும்; பின்னையும் ஆசை பேசாதிருக்கவொட்டாமையாலே, பெண்களுக்கு அற்றுத் தீர்ந்த க்ருஷ்ணனே! என்று கூவுகின்றாள். அங்ஙனம் கூவினவாறே உருவெளிப்பாட்டாலே அவன்றான் வந்து தோன்றினானாகக் கொண்டு 'பெருமானே! வா' என்று அன்புதோற்ற அழைக்கின்றாள்.

மயற் பெருங்காதல் என் பேதைக்கு வல்வினையேன் என்செய்கேன்?=இவள் திறத்திலே நான் செய்யக்கூடியதான உபாயம் ஒன்றும் தோன்றவில்லையே!; இவளுடைய காதலோ கரையழிந்து கிடக்கிறது. அதுதானே வடிவு

கொண்டாற்போலே யிருக்கின்ற விவளுக்கு நான் என்ன செய்யவல்லேன்? 'இப்படியெல்லாம் நீ இருக்கத்தகாது' என்று நான் சொன்னால் அதுகேட்கும் படியான நிலைமையன்றே. 'இப்படிப்பட்ட காதல் உனக்கு ஆகாது' என்று சொல்லலாமென்று பார்த்தாலோ, அது விஞ்சிக் கிடக்கின்றதே! என்செய்வேன்! என்கிறாள்.

மயற்பெருங்காதல்—மோஹத்தை விளைக்கக்கடவதான பேரன்பு என்றபடி. "வல்வினையேனே" என்றவிடத்து ஈடு;—"இவளை இப்படி காணும்படி மஹா பாபத்தைப் பண்ணினேன். ஆழ்வான் திருநயனங்கள் நோவுபட்ட பின்பு எம்பெருமானார் திருவுள்ளம் நோவுபட்டாப்போலே காணும் திருத்தாயார் திருவுள்ளம் படுகிறது." ... ... (கo).

வல்வினைதீர்க்கும்கண்ணனை வண்குருகூர்ச்சடகோபன் *
சொல்வினையால்சொன்னபாடல் ஆயிரத்துள்ளிவைபத்தும் *
நல்வினையென்றுகற்பார்கள் நலனிடைவைகுந்தம்நண்ணி *
தொல்வினைதீரவெல்லாரும் தொழுதெழவீற்றிருப்பாரே (கக).

வல் வினை	ஸகல பாபங்களையும்	நல் வினை என்று கற்பார்கள்	இது நல்ல செய்கை என்று கருதிக் கற்குமவர்கள்
தீர்க்கும் கண்ணனை	போக்குமியல்வினனான க்ருஷ்ணனை	நலன் உடை	(பகவதநுபவமாகிற) ஆனந்தத்தை யுடைத்தான
வண் குருகூர் சடகோபன்	வளப்பமுடைய திருநகரிக்குத் தலைவரான ஆழ்வார்	வைகுந்தம் நண்ணி	பரமபதத்தைக்கிட்டி
சொல் வினையால்	சொல்லுந் தொழில் வன்மையால்	தொல் வினை தீர	அநாதியான பாபங்கள் மறுவலிடாதபடி ஒழிய
சொன்ன பாடல்	அருளிச்செய்த பாட்டுக்கள்	எல்லாரும் தொழுது எழ	அங்குள்ள நித்யஸூரிகள் எல்லாரும் வணங்கிப் பெரியகிளர்த்தியை யுடையராம்படியாக
ஆயிரத்துள் இவை பத்தும்	ஆயிரத்துள் இவை பத்துப் பாட்டுக்களையும்	வீற்றிருப்பார்	இருக்கப்பெறுவர்கள்.

* * * [வல்வினை தீர்க்கும்.] இத்திருவாய்மொழி கற்பவர்கள் எல்லாத்துன்பங்களும் தொலையப்பெற்றுத் திருநாட்டிலே நித்யஸூரிகள் ஆதரிக்கும்படியான பெருமைபெற்று மகிழ்வரென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார்.

கீழ்ப்பாட்டிற் கூறியபடி ஆழ்வார்க்கு ஆற்றாமை மீதூர்ந்தவாறே இனி யிவரை இங்ஙனே துடிக்கவிட வொண்ணாதென்று திருவுள்ளம்பற்றிய எம்பெருமான் பதறி ஓடிவந்து ஸேவை ஸாதித்து இவருடைய துயரங்களைப் போக்கியருளினனென்பது விளங்க **வல்வினை தீர்க்குங் கண்ணனை** யென்கிறார். இங்கு நம்பிள்ளை யீட்டில்—"பெற்றவர்கள் கைவிட்டால் பிடித்தவர்கள் கைவிடார்களே" என்றுள்ள ஸ்ரீஸூக்தி மிகவும் ரஸிக்கத்தக்கது. கீழ்ப்பாட்டில் "மயற்

பெருங்காதலென் பேதைக்கு என் செய்கேன் வல்வினையேனே" என்று தாய் சொல்லித் தலைக்கட்டுகையாலே பெற்றவர்கள் கைவிட்டமை விளங்கிற்று. உடனே "வல்வினை தீர்க்குங் கண்ணனை" என்கையாலே பிடித்தவர்கள் கைவிட்டிலாமை விளங்கிற்று. **பிடித்தவர்கள்** என்றது—பரகத ஸ்வீகாரமாகப்பற்றின எம்பெருமான் என்றபடி.

"வண் குருகூர்ச் சடகோபன்" என்றவிடத்து வண்மையைக் குருகூர்க்கு விசேஷணமாக்கியுரைத்தார் பன்னீராயிரத்தில்; சடகோபனுக்கு விசேடணமாக்கி யருளினர் மற்ற பேராசிரியர்கள். உதாரரான ஆழ்வார் என்றபடி. இன்று நாமுங்கூட பகவத்குணாநுபவம் பண்ணுகைக்குப் பாங்காகப் பாசுரம்பாடி வைத்த ஔதார்யத்தை என்னென்போம்.!

சொல்வினையால் சொன்னபாடல் என்றது—வாசிக கைங்கர்யமாகப் பாடின பாசுரம் என்றபடி. **நல்வினையென்று கற்பார்கள்**—இப்பாசுரங்களின் இனிமை நெஞ்சிலே பட்டால் இவற்றையொழிய வேறொன்றால் போதுபோக்க வரிது; அப்படி இனிமையிலே தோற்றுக் கற்காவிடினும் 'இது நமக்கு நன்மை பயக்குமது' என்று கொண்டாகிலும் கற்பவர்கள் என்றபடி.

"தொல்வினை தீர நலனிடை வைகுந்தம் நண்ணி" என்று அந்வயிப்பது. "நலனிடை, நலனுடை" என்று இருவகையான பாடம் காண்கிறது. பொருள் ஒக்கும். ஆனந்த ப்ரசுரமான வென்றபடி. **எல்லாரும் தொழுதெழ வீற்றிருப்பார்**—இப்பாசுரம் பயின்றவர்கள் பரமபதத்தேறச் சென்றால் அங்குள்ள நித்ய முக்தர்கள் இவர்களை ஆதரிக்கும் பரிசு வாசாமகோசரம். "பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர்" என்கிறபடியே மஹோபசாரங்கள் செய்யப்பெற்று முடியுடை வானவராய் வீற்றிருப்பர்கள் என்கை. திருநாட்டிலுள்ளார் இவ்வருளிச் செயல்களிலே ஈடுபட்டிருக்கும் திறம் "கேட்டு ஆரார்வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லே" என்ற திவ்யஸூக்தியாலும் அறியத்தக்கது. (கக)

நான்காந் திருமொழி யுரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்

ஶ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

எம்பெருமான் தன்னுடைய வியோகத்திலே தன்னுடையவைகளான பொருள்களாலும் தனக்குப் போலியான பொருள்களாலும் அடியார்களை யீடு படுத்துகின்றனென்னுமிடம் இத்திருவாய்மொழியில் ஆழ்வாரருளிச்செய்கதாம்.

1 பூம்யாத்யை:. நான்காவது பாதத்தில் "ஸ்வீயை: துல்யைச்ச" என்றவிடத்திலே த்ருதீயாந்த பதங்களெல்லாவற்றிற்கும் அந்வயம் காண்க. * மண்ணையிருந்து துழாவி * என்கிற முதற்பாசுரத்திலே பூமியும் ஆகாசமுமான வஸ்துக்களாலும்; [வ்யதயதி என்கிற க்ரியாபதத்திலே முடிவு.]

2. ஸாகராத்யை:. * பிரான் கிடக்கும் கடலென்னும்.—செய்யதோர் நாயிற்றைக்காட்டி * ஸமுத்ரத்தாலும் ஸூர்யனாலும.

3. 4. ஜ்வலநசசிமுகை:. * அறியும் செந்தீயைத் தழுவி * ஒன்றிய திங்களைக்காட்டி. * அக்நி, சந்திரன் முதலியவற்றாலே.

5. வத்ஸபூர்வை: * கோமளவான் கன்றைப்புல்கி. * கன்றுகளாலும் ஸர்ப்பங்களினாலும்.

6. ந்ருத்யத்பி: ஸ்வைச்ச. * கூத்தர் குடமெடுத்தாடில் * குடக்கூத்தாடுகிற கோபாலர்களாலும்,

7. லோகாதிபி:. *ஏறிய பித்தினொடு எல்லாவுலகு கண்ணன் படைப்பென்னும். * உலகங்கள், நீறு செவ்வேயிடுமவர்கள் முதலானவற்றாலும்.

8. ப்ருதிவீக்ஷித்பி:. *திருவுடை மன்னரைக்காணில்* அரசர்களினாலும்.,

9. ஆத்மீயதாஸை:. *விரும்பிப் பகவரைக் காணில்.* விஷயவிரக்தர்களாய் ஜ்ஞாநாதிகர்களான அடியவர்களாலும்.

10. ஸௌலப்ய ஐச்வர்யவர்க்கை: அபிச குணகணை:. * கண்ணனென்று பேசும் பெருமானை வாவென்றாகூவும். * ஸௌலப்யம் பரத்வம் முதலான திருக்குணங்களாலும்;—ஆகவிப்படி ஸ்வகீயங்களும் ஸ்வஸத்ருசங்களுமான வஸ்துக்களாலே எம்பெருமான் தன் பிரிவிலே ஆச்ரிதர்களை வருந்தச் செய்கிறானென்னுமிடம் இத்திருவாய்மொழியில் ஆழ்வாராலே அருளிச்செய்யப்பட்டதென்கை. ... . (*)

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

(கருத்து.) கீழே ஆழ்வார்க்கு அளவுகடந்த ஆனந்தம் உண்டானவளவிலே அதனை ஸாத்மிக்கப் பண்ணவேணுமென்று விரும்பிய எம்பெருமான் சிறிது மறைந்து நின்றவளவிலே, ஆழ்வார் எம்பெருமானோடு ஸம்பந்தமுள்ள பதார்த்தங்களையும் அவனுக்குப் போலியான பதார்த்தங்களையுங்கண்டு அவனாகவே மயங்கி வருந்தினார் நான்காந் திருவாய்மொழியிலென்கை.

ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

மண்ணுலகில் முன்கலந்து மால்பிரிகையால், மாறன்
பெண்ணிலைமையாய்க் காதல்பித்தேறி—எண்ணிடில்முன்
போலிமுத லான பொருளையவ னாய்நினைந்து
மேல்விழுந்தான் மையல்தனின் வீறு.

மால்	எம்பெருமான்	முன் போலி முதலான பொருளை	கண்ணெதிரே தென்படுகிற பகவத்ஸத்ருச வஸ்துக்கள் முதலானவற்றை (க்கண்டு)
மண் உலகில்	இவ்விபூதியிலே	அவன் ஆய் நினைந்து	அந்த பகவானாகவே அவற்றை நினைத்து
முன் கலந்து பிரிகையால்	முன்னே கலந்து பிரிந்ததனால்	மையல் தனின் வீறு	வியாமோஹ மிகுதியினால்
மாறன்	ஆழ்வார்	மேல் விழுந்தான்	அவற்றிலே அதிக ஆதரம் காட்டினார்.
பெண் நிலைமை ஆய்	நாயகீஸமாதியையுடையராய்		
காதல் பித்து ஏறி	பக்தியாலே பித்து அதிகரித்து		
எண்ணிடில்	எண்ணுமிடத்தில்		

"புணர்தொறு மென்னக் கலந்து பிரிந்து ஜ்ஞாநபக்திகளை வளர்த்தது கனங்குழையிடக்காது பெருக்குதலும் மாஸோபவாஸி போஜநப் புறப்பூச்சும் போலே ஆற்றநல்ல மாபோகச்சிரமமாக" என்று ஆசார்ய ஹ்ருதயத்திலருளிச் செய்தபடியே, ஸம்ச்லேஷத்தாலுண்டான ஆனந்தரஸம்ஸாத்மிப்பதற்காக எம்பெருமான் ஆழ்வாரைவிட்டுப் பிரிந்திருக்க, அந்தப் பிரிவாற்றாமையினால் ஆழ்வார் கண்ணால்கண்ட பொருள்களை யெல்லாம் அந்த எம்பெருமானாகவே நினைத்து வருந்தினமை சொல்லிற்றாயிற்று.

மூன்றாமடியில், முதலான என்றதனால் எம்பெருமானுடைய ஸம்பந்தம் பெற்ற பொருள்கள் கொள்ளத்தக்கன. (௩௪)

ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி—திவ்யார்த்ததீபிகையில்
நாலாம்பத்து—நாலாந்திருமொழி உரைமுற்றிற்று.

ஸ்ரீ :

ஆழ்வார் திருவடிகளே சரணம்

திருவாய்மொழி—நான்காம்பத்து
ஐந்தாந் திருவாய்மொழி—வீற்றிருந்தேழுலகும்.

உரையவதாரிகை:—கீழ்த் திருவாய்மொழி பெருவிடாயோடே சென்றது. இங்ஙனே ஆழ்வார் விடாய்க்க வேணுமென்பதுதானே எம்பெருமானுடைய திருவுள்ளம்! சோறு உண்பதற்குப் பசி உபகரணமாமாப்போலே எம்பெருமானையநுபவிப்பதற்கு அளவு கடந்த ஆசையன்றோ உபகரணமாவது. அந்த ஆசையுண்டானாலன்றித் தன்னுடைய பரிபூர்ணாநுபவத்தைத் தந்தருள எம்பெருமான் திருவுள்ளம் பற்றுவதில்லை. அத்தகைய ஆசை * முனியே நான்முகனில் உண்டாகின்றது. "முடிந்த அவா" என்பது அங்குத்தான். அதற்குக் கீழுள்ளதெல்லாம் அந்த அவாவுக்குப் பண்ணுகிற க்ருஷியாயிருக்கும். எம்பெருமான் இடையிடையே வந்து காட்சிதாரா தொழியில் ஆழ்வாரை இழக்க நேருமே. "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்னும்படி பகவத்குணரஸிகர்களுக்குத் தண்ணீர்ப்பந்தல் வைக்கைக்காகவன்றோ ஆழ்வாரை இங்கு வைத்திருப்பது. ஸம்ச்லேஷ விச்லேஷங்கள் மாறிமாறி நடந்தாலல்லது எம்பெருமானுடைய திருவுள்ளம் நிறைவேற வழியில்லை; நம் போலியர்களின் பாக்கியமும் பரிபக்குவமாக வழியில்லை.

இத்திருவாய்மொழியில் ஆழ்வார்க்குச் செல்லுகிற ஆனந்தம் பேச்சுக்கு நிலமன்று. "இனி யென்னகுறை யெழுமையுமே?" என்றும் "இனியாவர் நிகரகல் வானத்தே" என்றும் மார்பு தட்டிப் பேசலாம்படி யாக்கியருளினன் எம்பெருமான். இத்திருவாய்மொழியின் அமைப்பை நோக்குமிடத்து இதற்கு மேற்பட்ட பரிபூர்ணாநுபவம் வேறில்லை என்றே சொல்லலாம்படியிராநின்றது. ஆனதுபற்றியே இத்திருவாய்மொழி * சூழ்விசும்பணி முகிலுக்கு அடுத்த திருவாய்மொழியாக இருந்திருக்கலாம் என்று நஞ்சீயர் ரஸோக்தியாக அருளிச்செய்வராம்.

கீழ்த்திருவாய்மொழியில் போலிகண்டு ப்ரமித்து மயங்கி ஆற்றாமைமீதூர்ந்த ஆழ்வாருக்கு எம்பெருமான் உபயவிபூதிநாதனாயிருக்கிற தன் படிகளில் ஒன்றுங் குறையாதபடி முற்றூட்டாகக் காட்டிக்கொடுத்து 'ஆழ்வீர்! நம்முடைய படிகளெல்லாங் கண்டீரே; நமது இந்த ஐச்வரியமெல்லாம் நிறம் பெற்றதாவது உம்முடைய திருவாக்காலே ஒழுங்குபடப் பாடினலாயிற்று. ஆகவே பாடிக்

காணீர்' என்று சொல்லி ஆழ்வார்திருக்கையிலே தாளத்தைக்கொடுக்க, அவ்விருப்புக்குப் பல்லாண்டுபாடி மகிழ்கிறாராய்ச்செல்லுகிறது இத்திருவாய்மொழி.

வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல்செல்ல, வீவில்சீர் *
ஆற்றல்மிக்காளுமம்மானை வெம்மாபிளந்தான்தன்னை *
போற்றியென்றேகைகளாரத் தொழுதுசொல்மாலைகள் *
ஏற்றநோற்றேற்கு இனியென்னகுறையெழுமையுமே ? (க)

159931

வீற்றிருந்து	(பரமபதத்திலே) எழுந்தருளியிருந்து	போற்றி என்றே	போற்றி போற்றியென்று வாழ்த்திக்கொண்டே
ஏழ் உலகும்	எவ்வுலகங்களிலும்	கைகள் ஆர தொழுது	கைகளின் விடாய் தீரும்படி அஞ்சலிபண்ணி
தனி கோல் செல்ல	அத்விதீயமான செங்கோல் நடக்கும்படி,	சொல் மாலைகள்	சொற்களாகிற மாலைகளை
வீவு இல் சீர்	முடிவில்லாத கல்யாண குணங்களை யுடையனாய்	ஏற்ற	(அவன் உகக்கும்படி) ஸமர்ப்பிக்கைக்கு
ஆற்றல் மிக்கு ஆளும்	சாந்தியுடனே ஆள்கின்ற	நோற்றேற்கு	புண்ணியஞ் செய்துள்ள எனக்கு
அம்மானை	ஸ்வாமியாய்,	இனி	இனிமேல்
வெம் மா பிளந்தான் தன்னை	கொடிய (கேசி என்னும் அஸுரனை) குதிரையை வாய்பிளந்து கொன்ற பெருமானை	எழுமையும்	ஏழேழுபடியான ஜன்மங்களிலும்
		என்ன குறை	என்ன குறையுண்டாம்?

* * * [வீற்றிருந்தேழுலகும்.] எல்லாவுலகங்களையும் நிர்வஹிக்கவல்லவனான எம்பெருமானை ஏத்தப்பெற்றவெனக்கு ஒருகாலத்திலும் ஒரு குறையுமில்லை யென்கிறார்.

திருநாட்டில் திருவனந்தாழ்வான் மீது பெரியபிராட்டியாரோடுகூட எழுந்தருளியிருந்து "பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும், அங்காதுஞ் சோராமே ஆள்கின்ற வெம்பெருமான்" என்கிறபடியே உலகமெல்லாம் செங்கோல்செலுத்தி நியமிப்பவனாய், இங்ஙனம் நியமிப்பதற்குறுப்பான ஞானம் சக்திமுதலிய திருக்குணங்கள் நிரம்பப்பெற்றவனாய், தன்னுடைய ப்ரபுத்வத்தினால் கொடுங்கோன்மை காட்டாதே சாந்தியோடே யிருந்து ஆள்பவனாய், ஸ்ரீக்ருஷ்ணனாய்த் திருவவதரித்துக் கேசிவதம் பண்ணின எம்பெருமானைப் பல்லாண்டு பல்லாண்டென்று வாயாரப்பாடிக் கையாரத்தொழுது, ஆனந்தத்திற்குப் போக்குவீடாகச்சொல்மாலைகள் சொல்லும்படியான பாக்கியம்பண்ணினவெனக்கு எற்றைக்கு மேழேழ்பிறவிக்கும் ஒருகுறையில்லை யென்றாராயிற்று.

திருநாட்டில் அநுபவத்தையும் இங்கிருந்தே யநுபவிக்கப் பெற்ற நான் 'அங்கே போகப்பெற்றிலேன்' என்கிற குறையுடையேனல்லேன் என்றவாறு.

ஆற்றல்மிக்கு என்பதற்கு "அநுத்ரிக்த ஸ்வபாவனாய்" என்று ஆறாயிரப்படி. உபய விபூதியுக்தனான செருக்காலே தன்பக்கல் சிலர்க்குக் கிட்டவொண்ணாதபடி யிருக்கையல்லாமல் ஸவிநயமாக அரசுபுரிகையைச்சொன்னபடி. ஸ்ரீரா

N38.12-11

மபிரான் அரசாண்டபடியைச்சொல்லுமிடத்து ""ராமோ ராஜ்யமுபாஸித்வா"" ராமோ ராஜ்ய முபாஸித்வா'' என்றார் வால்மீகிமுனிவர். இங்கு உபாஸித்வா என்ற ப்ரயோகம் மிகவழகியது. தன்பக்கலில் குடிமக்கள் அஞ்சுகையன்றிக்கே குடிமக்களிடத்தில் தான் அஞ்சிவர்த்திப்பன் போலும் ஸ்ரீராகவன். அப்படியேயாயிற்று எம்பெருமான் ஏழுலகும் தனிக்கோல் செலுத்தும்படி. ஆறுதல் என்கிற பொருளிலே ஆற்றல் என்றிருப்பதாகக் கொள்க. அதாவது - சாந்தி. ஆற்றல் என்று மிடுக்குக்கும் பேராதலால், இவ்வளவையும் நிர்வஹிக்கவல்ல ஸாமர்த்தியம் மிகுந்தவன் என்றதாகவுமாம்.

வெம்மாபிளந்த வரலாறு:—ஸ்ரீக்ருஷ்ணனைச் சூதுவழிகளால் கொல்ல முயன்ற கம்ஸன் ஒருநாள் கேசியென்பானோர் அசுரனை ஏவ, அவன் குதிரையுருவங்கொண்டு ஆடர்கள் அஞ்சி நடுங்கும்படி கனைத்துத்தூரத்திக்கொண்டு கண்ணபிரான் மேற் பாய்ந்துவர, அவனும் தன்திருக்கையை நன்றாய்ப்பெருக்கி நீட்டி அதன் வாயிற்கொடுத்துத் தாக்கிப் பற்களையுதிர்த்து உதட்டைப் பிளந்து அதனுடம்பையும் இருபிளவாக வகிர்ந்து தள்ளினன் என்பதாம்.

வெம்மாபிளந்தானென்று இங்கு அருளிச் செய்ததைப்பற்றி இரண்டு வகையான நிர்வாஹமுண்டு; கீழே ""ஆற்றல் மிக்காளும்'' என்றதற்கு மிடுக்கோடே கூடியாளும்படியைப் பொருளாகச் சொல்லும் பக்ஷத்தில் அதற்கு இந்த வெம்மா பிளந்த சரிதை த்ருஷ்டாந்தமாகக் கடவது. 'இது உபலக்ஷணமாய்' இப்படி மிடுக்குடையனாய்ச்செய்த செயல்களையெல்லாம் எடுத்துக்கொள்ளலாம். இது பட்டருடைய நிர்வாஹம்.

""வெம்மா பிளந்தான்'' என்றதை அந்தக் காரியத்தில் நோக்காகக் கொள்ளாமல் கண்ணபிரான் என்று வ்யக்தியைக் காட்டுவதற்காகச் சொன்ன சொல்லாகக்கொண்டு, ஆற்றல்மிக்காளுமவன் யாவனென்றால் கண்ணபிரான்— என்று காட்டுவதாகக்கொள்க. ஆற்றல் என்பதற்கு 'சாந்தி' என்னும் பொருளில் இந்த நிர்வாஹம். சாந்தியோடே ஆளுந்தன்மை ஸ்ரீராமபிரானிடத்திலுமிருந்தாலும் கண்ணபிரானிடத்தில் இது செவ்வனே காணத்தக்கதாம். பிறந்தவன்றே கம்ஸனைக்கொன்று முடிக்க வல்லமையிருந்தும் நெடுநாள் ஒளித்து வளர்ந்ததும், அடியவர்களுக்கு இழிதொழில் செய்து திரிந்ததும் முதலானவை காண்க. இது அம்மங்கியம்மாளுடைய நிர்வாஹம். .... (க).

மையகண்ணாள்மலர்மேலுறைவாள் உறைமார்பினன் *
செய்யகோலத்தடங்கண்ணன் விண்ணோர்பெருமான்தன்னை *
மொய்யசொல்லாலிசைமாலைகளேத்தி உள்ளப்பெற்றேன் *
வெய்யநோய்கள்முழுதும் வியன்ஞாலத்துவீயவே. (உ)

மையகண்ணாள்	மையெழுதப்பட்ட கண்ணை யுடையளாய்	மலர் மேல் உறைவாள்	தாமரை மலரிலே வஸிப்பவளான லக்ஷ்மி

உறை	நித்யவாஸம் பண்ணப் பெற்ற	இசை	இசையை யுடைத்தான
மார்பினன்	மார்பையுடையனாய்	மாலைகள்	மாலைகளாலே
செய்ய கோலம் தட கண்ணன்	சிவந்து அழகையுடைத்தாய் விசாலமான திருக்கண்களையுடையனாய்	வியல்ஞாலத்து	அகன்ற புவியிலே யிருக்கச்செய்தே
விண்ணோர் பெருமான் தன்னை	நித்யஸூரி நாதனான எம்பெருமானை	வெய்ய நோய்கள் முழுதும்	கொடிய க்லேசங்கள் அனைத்தும்
மொய்ய சொல்லால்	செறிந்த சொற்களாலே சமைந்ததாய்	வீய	நசிக்கும்படியாக
		ஏத்தி	துதித்து
		உள்ள பெற்றேன்	என்னெஞ்சாலே அநுபவிக்கப் பெற்றேன்.

* * * [மையகண்ணாள்] கீழ்ப்பாசுரத்திற் சொன்ன மேன்மைக்கு அடியான பிராட்டி ஸம்பந்தத்தை யுடையவனை ஸகலதாபங்களும் தீரும்படி புகழப்பெற்றேனென்கிறார். மையகண்ணாள்—கறுத்த கண்ணையுடையவள் என்றபடி. ஸ்த்ரீகளுக்கு இது லக்ஷணம். வடநூலார் அஸிதேக்ஷணா என்று ப்ரயோகிப்பர்கள். பிராட்டி எம்பெருமானுடைய கரிய திருமேனியை இடைவிடாது கண்டு கொண்டிருப்பதனால் கருமை மிக்க கண்ணையுடையளாயினள்போலும் என்று ரஸோக்தியாகவும் நம் முதலிகள் அருளிச்செய்வர்கள். ""பெரிய பிராட்டியார் திருக்கண்களாலே ஒருகால் கடாக்ஷித்தால் ஒருபாட்டம் மழை பொழிந்தாப்போலே ஸர்வேச்வரன் திருமேனி குளிரும்படியாயிற்றிருப்பது'' என்ற ஈட்டு ஸ்ரீஸூக்தியும் நோக்குக.

மலர்மேலுறைவாளுறை மார்பினன்=பூவிலும் கூசி அடியிடுமவள் பொருந்தி வாழப்பெற்ற திருமார்வை யுடையவன். ஸ்ரீஜநகராஜன் திருமகள் பெருமாளைக் கைப்பிடித்த பின்பு ஸ்ரீ மிதிலாபுரியை நினையாதாப்போலே ஸ்ரீமஹாலக்ஷ்மியும் இவன் மார்பில் சுவடு அறிந்தபின்பு தாமரைப் பூவையும் நினைக்க மாட்டாளாம்.

செய்யகோலத் தடங்கண்ணன்=பிராட்டியானவள் எம்பெருமானுடைய கரிய கோலத்திருவுருவைக் கண்டு கொண்டேயிருந்து கருங் கண்ணியானது போலே, எம்பெருமானும் அப்பிராட்டியினுடைய செய்யதிருமேனியையே கடாக்ஷித்துக் கொண்டிருக்கையாலே அத்திருமேனியிற் சிவப்பு ஊறி இவன் செய்ய கோலத்தடங்கண்ணனாயிருக்கும். இக்கண்ணழகும் இச் சேர்த்தியழகும் காட்டிலெறித்த நிலாவாகாமே அநுபவிக்கைக்கு ஒரு நாடாகவுண்டுஎன்கிறது விண்ணோர் பெருமான் தன்னை என்று.

ஆக இப்படிப்பட்ட எம்பெருமானைத் தொடையழகு பொருந்தியசொல் மாலைகளைக்கொண்டு துதிக்கவே, அநுபவித்தே அறவேண்டும்படியான கருமபந்தங்களடங்கலும் தொலைந்தொழிந்தன வென்கிறார் பின்னடிகளில். இன்னாருடைய கருமபந்தங்கள் என்று பிரித்துச் சொல்லாமையாலே, உலகத்திலேயே

கருமபந்தங்கள் இல்லையாம்படி செய்துவிட்டமை தோன்றுகின்றது. நம் பிள்ளை யீடு:—"பனை நிழல்போலே என்னையொருவனையும் நோக்கிக்கொள்ளுகையன்றிக்கே * ஊரும்நாடு முலகமும் தன்னைப்போலேயாம்படி நானிருந்த விபூதியிலுண்டான கருமங்களுமடைய நசித்ததென்கை." ... ... (௨)

வீவிலின்பம்மிக எல்லைநிகழ்ந்தநம்மச்சுதன் *
வீவில்சீரன்மலர்க்கண்ணன் விண்ணோர்பெருமான்தன்னை *
வீவில்காலமிசைமாலைகளேத்தி மேவப்பெற்றேன் *
வீவிலின்பம்மிக எல்லைநிகழ்ந்தனன்மேவியே. (௩)

வீவு இல் இன்பம்	அழிவில்லாத ஆனந்தமானது	வீவு இல் காலம்	ஒழிவில்லாத காலமெல்லாம்
மிக எல்லை நிகழ்ந்த	மிகுதியான எல்லையிலே வர்த்திக்கிறபடியிருலே	இசை மாலைகள்	இசைமிக்க சொல்மாலைகளாலே
நம் அச்சுதன்	அச்சுதன் என்னும் திருநாமத்தையுடையனாய்	ஏத்தி	துதித்து
வீவு இல் சீரன்	முடிவில்லாத வைலக்ஷண்யத்தையுடையனாய்	மேவ பெற்றேன்	கிட்டப்பெற்றேன்;
மலர் கண்ணன்	தாமரை மலர்போன்ற கண்களையுடையனாய்,	மேவி	கிட்டி
விண்ணோர் பெருமான் தன்னை	விண்ணோர்க்குத் தலைவனானவனை	வீவு இல்	முடிவில்லாத
		இன்பம்	ஆனந்தத்தினுடைய
		மிக எல்லை	முடிவான எல்லையிலே
		நிகழ்ந்தனன்	இராநின்றேன்.

* * * [வீவிலின்பம்மிக] திருவாய்மொழிபாடி அடிமை செய்யப்பெறுகையால் தமக்குண்டான ஆனந்தம்எம்பெருமானுடைய ஆனந்தத்தையும் அதிசயித்தது என்கிறார். முதலடி ஆனந்தவல்லியையடியொற்றி அருளிச்செய்ததென்று ஆசாரியர்கள் திருவுள்ளம்பற்றுகிறார்கள். ஆனந்தவல்லியாவது தைத்திரீயோபநிஷத்தில் ஒரு பகுதி. அது எம்பெருமானுடைய திருக்குணங்களுள் ஒன்றான ஆனந்த குணத்தைப்பற்றிப் பேசுகின்றது. அந்த ஆனந்தம் இவ்வளவு கொண்டதென்று சொல்ல முடியாதென்பதைக் காட்டுவதற்கு அங்கு ஒருவகையான கல்பனை செய்யப்பட்டிருக்கிறது. (அதாவது—) ஒரு மநுஷ்யன்; அவன் நல்ல யௌவந பருவத்திலுள்ளவன்; ஸகலசாஸ்த்ரங்களையும் ஒன்றுவிடாமல் ஓதிப் பிறர்களுக்கும் ஓதுவிப்பவன். ஆலஸ்யமின்றி எல்லாக் காரியங்களையும் வழுவாமற் செய்பவன்; தேஹத்திலும் மனத்திலும் திடமுள்ளவன்; இவ்வளவும் வாய்ந்தாலும் தரித்ரனாயிருந்தால் பயனில்லையே: அப்படியன்றிச் செல்வமெல்லாம் நிறைந்த பூமண்டலம்முழுவதையும் செங்கோல் செலுத்தி ஆளும்படியான ஒப்புயர்வற்ற ஸம்பத்தும் வாய்ந்தவன். இப்படிப்பட்ட அதிசயங்கள் நிறைந்த ஒரு மநுஷ்யனிருந்தால் அவனுக்கு உண்டாகக்கூடிய ஆனந்தத்தை முன்னே எடுத்துக்காட்டி, அதைவிட நூறுபங்கு அதிகமான ஆனந்த முடையவர்களாக

மநுஷ்ய கந்தர்வர்கள் என்ற வகுப்பைக்கூறி, அவர்களைவிட நூறுபங்கு அதிகமான ஆனந்த முடையவர்களாக தேவகந்தர்வர்களைக் கூறி, இப்படியே நூறு நூறுபங்கு அதிகமான ஆனந்த முள்ளவர்களாக வரிசையாய் பிரலோகலோகபித்ருக்களை, ஆஜாநஜ தேவர்களையும், கர்மதேவ தேவர்களையும், தேவர்களையும் இந்திரனையும் ப்ருஹஸ்பதியையும் பிரஜாபதியையும் சொல்லிவந்து, அந்த ப்ரஜாபதியின் ஆனந்தத்தைவிட நூறுபங்கு அதிகமான ஆனந்தமுடையது பரப்ரஹ்மம் என்று சொல்லிப்பார்த்து, 'பரப்ரஹ்மத்தின் ஆனந்தத்தை இவ்வளவு மட்டமாகவா சொல்லிவிடுகிறது' என்று குறைபட்டு "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்றபடி மறுபடியும் திருமபுகிறதாம்: அதாவது கீழ்ச் சொல்லிக்கொண்டுவந்த ப்ரக்ரியையில் கடைசியாக யாதொரு ப்ரஜாபதி சொல்லப்பட்டானோ, அவனை அடுத்த பர்யாயத்தில் மநுஷ்ய ஸ்தானத்திலே நிறுத்தி அவன் முதலாக ப்ரஜாபதி யளவும் சொல்லிக்கொண்டுபோய், அந்த ப்ரஜாபதியின் ஆனந்தத்தைவிட நூறுபங்கு அதிகமான ஆனந்தம் பரப்ரஹ்மத்தினுடையது என்று சொல்லி முடிக்கப்பார்த்து அதுவும்கூடாமையாலே முன்போலே மறுபடியும் ஒரு பர்யாயம் சொல்லுவது—இப்படியே அந்தாதியாக இன்றைக்கும் புநःபுநராவ்ருத்தியிலேயே கிடக்கின்றனும் வேத புருஷன்.

இப்படி அபரிச்சேத்யமான ஆனந்த முடையவனெம்பெருமான் என்று இப்பாட்டில் முதலடியில் அருளிச்செய்து, ஈற்றடியில் "வீவிலின்பம் மிகவெல்லை நிகழ்ந்தனன்" என்கையாலே எம்பெருமானுடைய ஆனந்தவல்லியிற்காட்டிலும் ஆழ்வாருடைய ஆனந்தவல்லி மேம்பாடுடையதாகக் கொள்ள இடமுண்டு.

வீவு—விச்சேதம்; அது இல்லாத இன்பம்—அவிச்சிந்நமான ஆனந்தம், அதுதான் எவ்வளவென்னில், மிகவெல்லைநிகழ்ந்த—'இனி இதுக்கு மேலில்லை' என்னலாம் படியான எல்லையிலுள்ளதாம்.

வீவில்சீரன் என்று நித்ய விபூதியுடைமையயுஞ் சொல்லும், கல்யாண குணமுடைமையயுஞ் சொல்லும். மலர்க்கண்ணன்—இயற்கையான ஆனந்த முடையவனென்னுமிடம் திருக்கண்கள்தானே கோட்சொல்லித் தருமாம். (௩)

மேவிநின்றுதொழுவார் வினைபோகமேவும்பிரான் *
தூவியம்புள்ளுடையான் அடலாழியம்மான்தன்னை *
நாவியலாலிசைமாலைகளேத்தி நண்ணப்பெற்றேன் *
ஆவியென்னாவியை யானறியேன்செய்தவாற்றையே. (௪)

மேவி நின்று	நெஞ்சு பொருந்தியிருந்து	மேவும்	தான் அவர்களோடே கலக்கின்ற
தொழுவார்	அநுபவிப்பாருடைய	பிரான்	மஹோபகாரகனாய்
வினை போக	பாபங்கள் யாவும் நசிக்கும்படி	தூவி அம் புள்	சிறகுகளையுடைய அழகிய பெரியதிருவடியை

உடையான்	ஊர்தியாகவுடையனாய்	எத்தி நண்ணப் பெற்றேன்	ஏத்துகையாகிற நண்ணுதலைப் பெற்றேன்
அடல் ஆழி	போர்வல்ல திருவாழியையுடையனான	ஆவி	எனக்கு அந்தராத்மபூதனான எம்பெருமான்
அம்மான் தன்னை	ஸர்வேச்வரனை	என் ஆவியை	என்னுடைய ஆத்மாவை
நா இயலால்	நாவினுடைய தொழிலாலே	செய்த ஆற்றை	இங்ஙனம் செய்த ப்ரகாரத்தை
இசை மாலைகள்	இசைரூபமான மாலைகளையிட்டு	யான் அறியேன்	நான் அறியமாட்டேன்.

* ※ * [மேவிநின்று தொழுவார்.] நித்ய ஸூரிநாதனாயிருந்துவைத்து நித்ய ஸம்ஸாரியான என்பக்கலில் பண்ணியருளின மஹோபகாரம் என்னே! என்று ஈடுபடுகிறார்.

எம்பெருமானுக்கு ப்ரணதார்த்திஹரன் என்று ஒரு திருநாமமுண்டு; அதன் பொருளை முதலடியில் அநுஸந்திக்கிறார். மேவி நின்றுதொழுகையாவது-தன்னையே விரும்பித் தொழுகை; ப்ரயோஜநாந்தரங்களுக்கு மடியேலாதே அநந்யப்ரயோஜநர்களாய்த் தொழுகை. "நம்பும் மேவும் நசையாகும்மே" என்கிறபடியே மேவுதலாவது ஆசைப்படுகை; தன்னையே ஆசைப்பட்டு என்றபடி. ப்ரயோஜநாந்தரங்களை ஆசைப்பட்டுத் தொழுவாருடைய வினைகளைப் போக்கமாட்டானோ? என்று கேட்கவேண்டா.

தூவி அம் புள்ளுடையான்—தூவியென்று சிறகுக்குப்பெயர்; கருத்மானுக்குச் சிறகிருக்கின்றமைமை இவர் எடுத்துரைக்க வேணுமோ? வேண்டா; ஆயினும் உரைப்பது அநுபவராஸிக்யத்தாலேயாகும். "பண்கொண்ட புள்ளின் சிறகொலி பாவித்துத் திண்கொள்ள வோர்க்கும் கிடந்தென் செவிகளே" என்று கீழே அருளிச்செய்தாரே. ஆழ்வாருடைய திருவுள்ளத்திலே பெரியதிருவடியின் சிறகே உறைந்திருக்கும் போலும். அம்புள்—அழகிய புள்; என்ன அழகு என்னில்; "த்வதங்க்ரிஸம் மர்த்த கிணாங்கஶோபிநா — ஸ்வதங்க்ரிஸம் மர்த்த கிணாங்க சோபிநா." என்று ஆளவந்தார் அருளிச்செய்தபடியே எம்பெருமானுடைய திருவடி பட்டுப் பட்டுத் தழும்பேறின அழகு.

அடலாழியம்மான்=அடல்—கொல்லுகை, வலிமை, போர், வெற்றி என நான்கு பொருள்களுண்டு.

நாஇயலால் இசைமாலைகளேத்தி — நாப்புரட்டினதெல்லாம் இயலும் இசையுமாயிற்றென்பர். கவிபாடவேணுமென்கிற முயற்சியின்றியே நாக்கு இயம்பிற்றெல்லாம் நல்லிசை மாலைகளாயினவாம். திருவாய்மொழியைக் கொண்டு அவனையேத்தி அநுபவிக்கப் பெற்றேனென்கை.

[ஆவி என்னாவியை இத்யாதி.] ஆவி என்கிறது எம்பெருமானை; உலகுக்கு ஒருயிராயிருக்கையாலும், வேதாந்தங்களிலே ஆத்மாஎன்று எம்பெருமானை

என்றருளிச்செய்யப்பட்டது.—திருவாய்மொழி பத்துப் பத்தாலும் ச்ரியஃபதித்வம் முதலாக கைங்கர்ய விரோதி நிவ்ருத்தி யளவாக த்வயத்தில் பிரதிபாதிக்கப்பட்ட பத்து அர்த்தங்களையும் ப்ரதிபாதிக்கையாலே த்வயார்த்தமாய்க்கொண்டு, தீர்க்க சரணாகதியென்று ப்ரஸித்தமாயிருக்குமென்று அஷ்டாதச ரஹஸ்யங்களுள் ஒன்றான ஸாரஸங்க்ரஹமென்னும்ப்ரபந்தத்திலே சொல்லப்பட்டதென்கை.

அந்தப்பிரபந்தத்திலுள்ள விஷயங்கள் இங்கே சுருக்கமாக நிரூபிக்கப்படுகின்றன:—த்வயத்தில் பத்து அர்த்தங்கள் பிரதிபாதிக்கப்படுகின்றன. அவையாவன:—ச்ரிய: பதித்வம், நாராயணத்வம், நாராயணனுடைய ஸர்வலோக சரண்யமான சரணாரவிந்தயுகளம், அதினுடைய உபாயத்வம், அத்திருவடிகள் விஷயத்தில் சேதநன் செய்யும் ப்ரார்த்தநா கர்ப்பமான விஸ்ரம்பம், அவைவர்க்கும் கைங்கர்யபோகத்தையளிப்பதற்காகப் பெருமானுக்கும் பிராட்டிக்குமுண்டான நித்யஸம்பந்தம், கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தியான எம்பெருமானுடைய போக்யதை, ஸர்வஸ்வாமித்வம், நித்யகைங்கர்யம், கைங்கர்ய விரோதிகளை முற்றுங்களைதல்—ஆகிற இவையாம். இப்பத்து அர்த்தங்களையும் திருவாய்மொழியில் பத்துப் பத்துக்களிலும் நம் பூருவாசாரியர்கள் அடைவே யோஜித்து அநுஸந்தித்துப் போருவர்கள்.

1. முதற்பத்தில் * மலர்மகள் விரும்பும் நமரும் பெறலடிகள் * மலராள் மைந்தன் * திருமகளார் தனிக்கேள்வன் * திருவின் மணாளன் * பூமகளார் தனிக்கேள்வன் * மைந்தனை மலராள் மணவாளனை * என்கிற பாசுரங்களினால் ச்ரிய: பதித்வம் சொல்லிற்றாயிற்று. இது த்வயத்தில் ஸ்ரீமத் பதார்த்தம்.

2. இரண்டாம்பத்தில் * எம்பெருமான் நாரணற்கு * எம்பிரானெம்மான் நாராயணனாலே * நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன் * என்கிற பாசுரங்களினால் நாராயணத்வம் சொல்லிற்றாயிற்று. இது த்வயத்தில் நாராயண பதார்த்தம்.

3. மூன்றாம் பத்தில் * நாண்மலராமடித்தாமரை * அங்கதிரடியன் * * அவன் பாதபங்கயம் * அன்று தேர்கடவிய பெருமான் கனைகழல் * மூவுலகுந் தொழுதேத்துஞ் சீரடியான் * என்கிற பாசுரங்களினால் நாராயணனுடைய ஸர்வலோக சரண்யமான சரணாரவிந்தயுகளம் சொல்லிற்றாயிற்று. இது த்வயத்தில் சரணௌ என்றதின் அர்த்தம்.

4. நாலாம்பத்தில் * இலங்கை நகர் அம்பெரியுய்த்தவர் * வல்வினை தீர்க்கும் கண்ணனை * தொல்வினை தீர * வெய்ய நோய்கள் முழுதும் வியன்ஞாலத்து வீயவே * மேவி நின்று தொழுவார் வினைபோக * பிறந்தும் செத்தும் நின்றிடறும் பேதைமை தீர்ந்தொழிந்தேன் * நோயே மூப்பிறப்பிறப்புப் பிணியேயென்றிவை யொழிய * வேட்கை யெல்லாம் விடுத்து-உன் கூட்டரிய திருவடிக்கண் கூட்டினை * அவைதே உய்யப்புகுமாறு * உய்வுபாயம் மற்றின்மைதேறி * என்கிற

பாசுரங்களினால்-அநிஷ்ட நிவ்ருத்தியையும் இஷ்டப்ராப்தியையும் செய்தலாகிற உபாயத்வம் சொல்லிற்றாயிற்று. இது த்வயத்தில் ஶரணம் என்றதின் அர்த்தம்.

5 ஐந்தாம்பத்தில் * தமியேனுக்கருளாய் * ஆறெனக்கு நின்பாதமே சரணாக * உன்னாலல்லால் யாவராலு மொன்றுங்குறை வேண்டேன் * கழல்களவையே சரணாகக்கொண்ட * நம்பெருமானடிமேல் சேமங்கொள் * நாகணைமிசை நம்பிரான் சரணேசரண் நமக்கென்று நாடொறுமேக சிந்தையனாய் * என்கிற பாசுரங்களினால் ப்ரார்த்தநாகர்ப்ப விஸ்ரம்பம் சொல்லிற்றாயிற்று. இது த்வயத்தில் ப்ரபத்யே என்றதின் அர்த்தம்.

6. ஆறாம்பத்தில் *திருமாமகளிருந்தாம் மலிந்திருந்து * அடிமைசெய்வார் திருமாலுக்கே *ஒசிந்த வொண்மலராள் கொழுநன்* என் திருமார்வற்கு* * கோலத்திருமாமகளோடுன்னை * என்கிற பாசுரங்களினால் கைங்கர்ய ப்ரதாநார்த்தமான ஸ்ரீநாராயணர்களின் நித்யஸம்பந்தம் சொல்லிற்றாயிற்று. இது த்வயத்தில்ஸ்ரீமதே என்பதின் அர்த்தம்.

7. ஏழாம்பத்தில் * கன்னலேயமுதே * கொடியேன் பருகின்னமுதே * *அலைகடல்கடைந்தவாரமுதே * திருமாலின் சீர் இறப்பெதிர்காலம் பருகிலுமாரவனோ * இவ்வேழுலகை யின்பம் பயக்க * என்கிற பாசுரங்களினால் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியான எம்பெருமானுடைய போக்யதை சொல்லிற்றாயிற்று. இது த்வயத்தில் நாராயணபதத்தின் அர்த்தம்.

8. எட்டாம்பத்தில் * அடியனேன் பெரியவம்மானே * விண்ணவர்கோன் நங்கள்கோனை * அமர்ந்தநாதனை * மூவுலகாளியப்பன் * நேர்பட்ட நிறை மூவுலகுக்கும் நாயகன் * என்கிற பாசுரங்களினால் ஸர்வஸ்வாமித்வம் சொல்லிற்றாயிற்று. இதுவும் த்வயத்தில் நாராயண பதார்த்தமே.

9. ஒன்பதாம் பத்தில் * பண்டைநாளாலே நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளுங்கொண்டு நின்கோயில் சீய்த்து * நின் தீர்த்தவடிமைக்குற்றேவல் செய்து * தொடர்ந்து குற்றேவல் செய்து * மெல்லடியைக் கொடுவினையேனும் பிடிக்க * உறுவதிதுவென்று உனக்காட்பட்டு * ஆட்கொள்வானொத்து * நானும் மீளாவடிமைப்பணி செய்யப்புகுந்தேன் * என்கிற பாசுரங்களினால் நித்ய கைங்கரியம் சொல்லிற்றாயிற்று. இது த்வயத்தில் சதுர்த்தியின் அர்த்தம்.

10. பத்தாம்பத்தில் * துயர்கெடுங்கடிது * கெடுமிடராயவெல்லாம், * எழுமையுமேதஞ்சாரா * தீரும் நோய் வினைகளெல்லாம் * இப்பிறப்பறுக்கும். * உன்றன் திருவுள்ளமிடர்கெடுந்தோறும் நாங்கள் வியக்கவின்புறுதும் எம்பெண்மையாற்றோம் * பிணியொன்றும் சாரா பிறவி கெடுத்தாளும் * பிறவித்துயர்கடிந்தோம் * விண்டே யொழிந்த வினையாயினவெல்லாம் * அமராவினைகளே. * கடுநரகம் புகலொழித்த * பிறவி கெடுத்தேன் * தடுமாற்ற வினைகள் தவிர்த்

211. மூன்றில் சுருக்கிய ஐந்தையும் உயர் திண்ணணை ஒன்று பயிலேறு கண்கரு வீடு சொன்னால் ஒருக்கொண்ட நோற்ற நாலும் எம்மாவோழிவில் நெடுவேய் என்கிற இருபதிலே விசதமாக்கி எண்பதிலே பரப்புகை.

தான் * அவாவற்றுவீடுபெற்ற * என்கிற பாசுரங்களினால் கைங்கர்ய விரோதிகளின் நிச்சேஷ நிபர்ஹணம் சொல்லிற்றாயிற்று. இது த்வயத்தில் நம: பதத்தின் அர்த்தம்.

ஆக இவ்வளவாலும் தீர்க்க சரணாகதியென்கிற திருவாய்மொழி த்வயார்த்த ப்ரதிபாதகமென்னுமிடம் நன்கு நிரூபித்ததாயிற்று.

[திருவாய்மொழிக்கு மற்றும் சில அர்த்தயோஜனைகளுமுண்டென்றல்.]

211. திருமந்த்ரத்திலும் சரமச்லோகத்திலும் ஸங்க்ரஹமாகக் கூறப்பட்ட அர்த்த விசேஷங்களை த்வயத்தில் விவரிப்பதுபோலே, திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதியாகிற முந்தின பிரபந்தங்கள் மூன்றிலும் சுருக்கமாகச் சொல்லப்பட்ட அர்த்த பஞ்சகத்தைத் திருவாய்மொழியில் இருபது பதிகங்களிலே விசதமாகவுரைத்து, மற்றையெண்பது பதிகங்களாலும் அதுதன்னையே விஸ்தரிக்கிறபடியினால் அர்த்த பஞ்சகத்தையும் திருவாய்மொழிக்கு ப்ரமேயமாக நிர்வஹிக்கிற புடையொன்றுண்டு.

அந்த ஐந்து அர்த்தங்களினுள்ளும் ப்ரதானமான உபாயோபேயங்களிரண்டையுமே இதற்கு ப்ரமேயமாக நிர்வஹிக்கிற புடையுமுண்டு.

அவ்விரண்டினுள்ளும் உபேயமொன்றையுமே இதுக்கு ப்ரமேயமாக நிர்வஹிக்கிறபுடையுமுண்டு. இவை விவரிக்கப்படுகின்றன. இருபது பதிகங்களிலே அர்த்த பஞ்சகம் விசதீகரிக்கப்பட்டமை எங்ஙனே யென்னில்;—

1. உயர்வற வுயர்நலம், திண்ணன்வீடு, அணைவதரவணைமேல், ஒன்றுந்தேவு—ஆகிய நான்கு பதிகங்களிலும் "[illegible]— ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம்" என்கிற பரஸ்வரூபம் பிரதிபாதிக்கப்பட்டது.— (1) ச்ருதிச்சாயையாலே அந்வயரூபேண ஸ்வாநுபவ முகத்தாலே பரத்வத்திலே பரத்வத்தைப் ப்ரதிபாதித்தது—உயர்வறவுயர்நலம். (2) இதிஹாஸ புராணப்ரக்ரியையாலே அந்வயவ்யதிரேகங்களிரண்டாலும் பரோபதேச முகத்தாலே அவதாரத்தில் பரத்வத்தை ப்ரதிபாதித்தது—திண்ணன்வீடு. (3) மோக்ஷப்ரதத்வத்தைச் சொல்லும் முகத்தாலே பரத்வத்தை ப்ரதிபாதித்தது—அணைவதரவணை. (4) அர்ச்சாவதாரத்திலே பரத்வத்தை ப்ரதிபாதித்தது—ஒன்றுந்தேவு. ஆக இந் நான்கு திருவாய்மொழிகளாலும் பரஸ்வரூபம்.

2. பயிலுஞ்சுடரொளி, ஏறாளுமிறையோன், கண்கள்சிவந்து, கருமாணிக்கமலை—ஆகிய நான்கு பதிகங்களிலும் "[illegible]—

யாலே ஐந்தையும், அருளினன் வீடு பெற்றவென்கையாலே ஐந்திலு
மிரண்டையும், தொழுது களித்தேன் சொல்லுப் பெற்றேன் பணிசெய்

ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மநঃ.'' என்கிற ஸ்வஸ்வரூபம் ப்ரதிபாதிக்கப்பட்டது.— (1) பகவத்சேஷத்வத்திற் காட்டிலும் அதன் எல்லைபான பாகவதசேஷத்வமே ஆத்மாவுக்கு உத்தேச்யமென்று ப்ரதிபாதித்தது—பயிலுஞ்சுடரொளி. (2) சேஷத்வத்திற்கு உறுப்பல்லாத ஆத்மாத்மீயங்கள் த்யாஜ்யம் என்கிற முகத்தாலே சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபமென்று ப்ரதிபாதித்தது—ஏருளுமிறையோன். (3) இவ்வாத்மவஸ்து எம்பெருமானுக்கு ப்ரகாரதயா சேஷமாய், ப்ரக்ருதே: பரமாய், ஜ்ஞாநாநந்த லக்ஷணமாயிருக்குமென்று தெரிவித்த முகத்தாலே ஆத்மஸ்வரூபத்தை ப்ரதிபாதித்தது—கண்கள்சிவந்து. (4) அந்ய சேஷத்வ ப்ரஸங்கமுங்கூட அஸஹ்யமாம்படியான அதின் அநந்யார்ஹத்வத்தை ப்ரதிபாதித்தது—கருமாணிக்கமலை. ஆக இந்நான்கு பதிகங்களினலும் ஸ்வஸ்வரூபம் விசதீகரிக்கப்பட்டதாயிற்று.

3. வீடுமின் முற்றவும், சொன்னல் விரோதம், ஒரு நாயகம், கொண்ட பெண்டிர்--ஆகிய நான்கு பதிகங்களிலும் விரோதிஸ்வரூபம் சொல்லிற்று. (1) எம்பெருமான் தவிர மற்றவிஷயங்களைப் பற்றுகைக்குடலான அஹங்காரமமகாரங்கள் த்யாஜ்யம் என்று பிரதிபாதித்தது—வீடுமின்முற்றவும். (2) அஸேவ்யஸேவை த்யாஜ்யம் என்று பிரதிபாதித்தது—சொன்னல் விரோதம். (3) ஐச்வர்ய கைவல்யங்கள் த்யாஜ்யம் என்று பிரதிபாதித்தது—ஒரு நாயகம். (4) சரீரஸம்பந்தத்தைப்பற்றிவரும் பரிக்ரஹங்கள் த்யாஜ்யம் என்று பிரதிபாதித்தது—கொண்ட பெண்டிர். ஆக இந்நான்கு பதிகங்களினலும் விரோதிஸ்வரூபம்.

4. நோற்ற நோன்பிலேன், ஆராவமுது, மானேய்நோக்கு, பிறந்தவாறு ஆகிற நான்கு பதிகங்களினலும் உபாயஸ்வரூபம் பிரதிபாதிக்கப்படுகிறது.— (1) * நோற்றநோன்பிலேன் நுண்ணறிவிலேன் என்று ஆகிஞ்சந்ய பூர்வகமாக * ஆறெனக்கு நின்பாதமே சரணகத் தந்தொழிந்தாய் * என்று பிரதிபாதிப்பது—நோற்ற நோன்பு. (2) * களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண்மற்றிலேனென்று அநந்யகதித்வ பூர்வகமாக * கழல்களவையே சரணகக்கொண்டமையை ப்ரதிபாதித்தது—ஆராவமுது (3) * வைகலும் வினையேன் மெலிய என்று பக்திபாரவச்யம் முன்னக * நம்பெருமானடிமேல் சேமங்கொண்டமையை ப்ரதிபாதித்தது—மானேய்நோக்கு. (4) * எனதாவியை நின்று நின்று உருக்கியுண்கின்ற என்று—தரித்து நின்று அவன் குணங்களை அநுஸந்திக்கமாட்டாத சைதில்யம் செல்லாநிற்க, * நாகணைமிசை நம்பிரான் சரணே சரண்நமக்கென்று நாடொறும் ஏகசிந்தையனனமையை ப்ரதிபாதித்தது—பிறந்தவாறு. ஆக இந்நான்கு பதிகங்களாலும் உபாயஸ்வரூபம்.

5. எம்மாவீடு, ஒழிவில்காலம், நெடுமாற்கடிமை, வேய்மருதோளிணை ஆகிற நான்கு பதிகங்களினலும் பலஸ்வரூபம் விசதீகரிக்கப்பட்டது. (1) *தனக்

என்கிற முக்தலக்ஷண வ்ருத்தியாலே இரண்டிலொன்றையும் இதுக்கு
ப்ரமேயமென்னும்.

கேயாக எனைக்கொள்ளுமீதே என்று கைங்கரியத்தில் ஸ்வார்த்தத்வ நிவ்ருத்தியை அபேக்ஷித்தது—எம்மாவீடு (2) ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸகல சேஷ வ்ருத்திகளையும் பண்ணவேணுமென்று பாரித்தது—ஒழிவில்காலம். (3) அதுதான் பாகவத கைங்கர்ய பர்யந்தமாக வேணுமென்று மநோரதித்தது—நெடுமாற்கடிமை. (4) * உன்றன் திருவுள்ளமிடர் கெடுந்தோறும் என்று பரஸம்ருத்தியே பேறாயிருக்கும்படியைச் சொன்னது—வேய்மருதோளிணை. ஆக இந்நான்கு பதிகங்களினலும் பல ஸ்வரூபம்.—ஆகவே அர்த்த பஞ்சகம் இருபது திருவாய்மொழிகளிலே விசதமாக ப்ரதிபாதிக்கப்பட்டமை நிரூபித்ததாயிற்று. மேற்குறித்த இருபது திருவாய்மொழிகள் போக மிக்குள்ள எண்பது திருவாய்மொழிகளாலும் இவ்வர்த்த பஞ்சகமே விஸ்தரிக்கப்படுகின்றதாகக்கொள்க. இவ்வகையாலே அர்த்த பஞ்சகமும் திருவாய்மொழிக்கு ப்ரமேயமென்று நிர்வஹித்தல் ஒரு புடை. திருவாய்மொழியின் தொடக்கத்தையும் முடிவையும் நோக்கி உபாயோபேயங்க ளிரண்டையுமே இதற்கு ப்ரமேயமாக நிர்வஹிப்பதுமுண்டு. அதாவது *மயர்வற மதிநல மருளினன் என்று தொடங்கியிருக்கிறது. இதனல் அவனருளே உபாயமென்று காட்டப்பட்டது. * அவாவற்று வீடுபெற்ற என்று தலைக்கட்டியுள்ளது. இதனல் வீடு பெறுகை உபேயமென்று காட்டப்பட்டது. ஆகவே இவை யிரண்டுமே திருவாய்மொழிக்கு ப்ரதாந ப்ரமேயம்; இவ்வுபாயோபேயங்களுக்கு அதிகாரி இன்னன் என்கைக்காக ப்ரத்யகாத்ம ஸ்வரூபம் சொல்லுகிறது. உபாயபூதனும் உபேய விஷயமும் இன்னனென்கைக்காகப் பரஸ்வரூபம் சொல்லுகிறது. உபேயத்திற்கு இடையூறும் உபாயத்தினல் நிவர்த்திப்பிக்கக் கூடியதாயுமுள்ளது இன்னதென்கைக்காக விரோதி ஸ்வரூபம் சொல்லுகிறது. ஆகவே, பரஸ்வரூபமும், ஸ்வஸ்வரூபமும் விரோதிஸ்வரூபமும் ப்ரஸங்காத் வந்தவை; உபாயோபேய ஸ்வரூப ப்ரதிபாதனமே முக்கியமான ப்ரமேயம் என்பது இந்த நிர்வாஹத்தின் தாற்பரியம்.

உபாய, உபேயங்களிரண்டினுள்ளும் உபேயமான பலன் ஒன்றுமே உத்தேச்யம்; அதற்குறுப்பாக மற்றுள்ள நாலு அர்த்தமுஞ் சொல்லுகிறது—என்பது மூன்றாவது நிர்வாஹத்தின் தாற்பரியம். கைங்கரியமாகிற உபேயமே திருவாய்மொழியாயிரத்துக்கும் ப்ரதானமான ப்ரமேயம்; கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியையும், கைங்கர்ய ஆச்ரயத்தையும், கைங்கர்ய விரோதியையும், அவ்விரோதி நிவர்த்தகத்தையும் அறிவிக்கைக்காகவே மற்றைநாலு அர்த்தமுஞ் சொன்னது என்றவாறு.

"தொழுது களித்தேன் சொல்லுப்பெற்றேன் பணிசெய் என்கிற முக்தலக்ஷணவ்ருத்தியாலே'' என்கிற மூலத்தின் பொருள் யாதெனில்; முக்தர்களுக்கு லக்ஷணமாகவும் தொழிலாகவும் எவை சொல்லப்பட்டிருக்கின்றனவோ, அவையே

212. ரஹஸ்யத்துக்கு ஓரெழுத்தும் அதுக்கு ஒருருவும் போலேயானவற்றிலே, இமையோரதிபதி அடியேன்மனனே பொய்மயர்வு பிறந்தருளினன்

உபேயமாகும்; "ஸம்ஸாரஜலிவபடா ஹ்ருஷ்டா நஜைதெலுவ வாதிந:— பத்தாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா: நமஇத்யேவவாதிந:" என்கிறபடியே தொழுகையும் களித்திருக்கையும் நம: நம: என்கையும் அவர்களுடைய லக்ஷணம். விவத்நுவ: என்கிறபடியே வாக்கினால் துதிசெய்தல் அவர்களுடைய தொழில். திருவாய்மொழியிலும் * தொழுதெழென்மனனே * விருப்பேபெற்று அமுதமுண்டு களித்தேனே * மேலைத்தொண்டு உகளித்து அந்திதொழுஞ் சொல்லுப்பெற்றேன் * சொற்பணிசெயாயிரம் * என்கிற பாசுரங்களில் நோக்காகவேணும்.

[திருவிருத்தத்தின் முதற்பாசுரத்திலும் திருவாய்மொழியின் முதற்பாசுரத்திலுமுள்ள அர்த்த விசேஷங்களை அருளிச்செய்தல்.]

212. இனி, ப்ரதம ப்ரபந்தமும் சரமப்ரபந்தமுமான திருவிருத்தம் திருவாய்மொழிகளினுடைய ஸங்க்ரஹங்களான முதற்பாட்டுக்களில் பிரதிபாதிக்கப்பட்டுள்ள அர்த்த விசேஷங்கள் பலவும் நிரூபிக்கப்படுகின்றன—ரஹஸ்யத்துக்கு ஓரெழுத்தும், அதுக்கு ஒருருவும் போலேயானவற்றிலே என்கிற மூலத்திற்குப பொருளாவது—; ரஹஸ்யத்துக்கு—திருமந்த்ரமாகிற ரஹஸ்யத்துக்கு, ஓரெழுத்துப்போலே—"ஓமித்யேகாக்ஷரம்" என்று ஓரெழுத்தாயிருக்கிற ப்ரணவம் எப்படி ஸங்க்ரஹமாயிருக்கிறதோ, அப்படியும்; அதுக்கு—அந்த ஏகாக்ஷரமான ப்ரணவத்துக்கு, ஓருருவும்போலே—ஓர் அவயவமாயிருக்கிற அகாரம் எப்படி ஸங்க்ரஹமாயிருக்கிறதோ அப்படியும்; ஆனவற்றிலே—நூறுபாட்டுக்கு ஸங்க்ரஹமாயிருக்கின்ற * பொய்ந்நின்ற ஞானத்திலும், ஆயிரம்பாட்டுக்கு ஸங்க்ரஹமாயிருக்கின்ற * உயர்வறவுயர் நலத்திலும் என்றபடி. பெரிய திருமொழியில் "அங்கோரெழுத்தோருருவானவனே!" என்ற சந்தையை நோக்கி "ஓரெழுத்தும் அதுக்கு ஒருருவும் போலே" என்றருளிச்செய்தது

மேற்குறித்த முதற்பாட்டுக்களிரண்டிலும் அர்த்த பஞ்சகம் ஸங்க்ரஹேண ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றமை முதலில் நிரூபிக்கப்படுகிறது.

[இமையோர் அதிபதி]

* இமையோர்தலைவா * என்று திருவிருத்தத்திலுள்ளது; * அயர்வறுமமரர்களதிபதி என்று திருவாய்மொழியிலுள்ளது. இரண்டு சந்தைகளையும் சேரப்பிடித்து அருளிச்செய்திருக்கிறது. அடியேன்மனனே—பொய்மயர்வு—பிறந்தருளினன—விண்ணப்பம்தொழுதெழு—என்கிற மேல் வாக்கியங்களிலும் இங்ஙனமே கண்டுகொள்வது.

விண்ணப்பம் தொழுதெழென்ற பஞ்சகத்தோடே அவித்யாதிஸ்வரூப ஸ்வபாவ, ஆத்மேச்வரபந்த, ரக்ஷணக்ரம, குணவிக்ரஹ விபூதியோக,

---

1. * இமையோர் தலைவா! * என்று திருவிருத்தத்திலும், * அயர்வறுமமரர்களதிபதி * என்று திருவாய்மொழியிலும் ஸூரிஸேவ்யமாய் ஸர்வாதிகமாயிருக்கும் பரஸ்வரூபம் சொல்லிற்று.

2. * அடியேன் * என்று திருவிருத்தத்திலும் * என்மனனே * என்று திருவாய்மொழியிலும், சேஷபூதமாய், பரிசுத்தாந்த:கரணமாயிருக்கும் ஸ்வஸ்வரூபம் சொல்லிற்று.

3. * பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பும் * என்று திருவிருத்தத்திலும், * மயர்வு * என்று திருவாய்மொழியிலும் அவித்யாதிகளான விரோதிஸ்வரூபம் சொல்லிற்று.

4. * உயிரளிப்பானெந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் * என்று திருவிருத்தத்திலும், * மதிநலமருளினன் * என்று திருவாய்மொழியிலும் லோகரக்ஷணார்த்தமாகப் பலபல அவதாரங்களைப் பண்ணின எம்பெருமானுடைய க்ருபையே உபாயமென்று உபாயஸ்வரூபம் சொல்லிற்று.

5. * செய்யும் விண்ணப்பம் * என்று திருவிருத்தத்திலும் * தொழுதெழு * என்று திருவாயமொழியிலும்—எம்பெருமான் விஷயத்தில் கரணத்ரயத்தாலும் பண்ணும் கைங்கர்யமே பரமபுருஷார்த்தமென்று உபேய (ஹு) ஸ்வரூபம் சொல்லிற்று.

[ஆக இங்ஙனே ஸங்க்ரஹித்துச்சொன்ன அர்த்தபஞ்சகந் தவிர மற்றுஞ் சில அர்த்த விசேஷங்களும் ஸங்க்ரஹிக்கப்பட்டுள்ளன என்பது இனி நிரூபிக்கப்படுகிறது.

1. அவிபாஸ்வயஸ்த்திருவபாவம்,	6. விபூதியோகம்,
2. ஆத்மேச்வரபந்தம்,	7. ததீயாபிமாநம்,
3. ரக்ஷணக்ரமம்,	8. உபதேசவிஷயம்,
4. குணயோகம்,	9. அந்யாபதேசஹேது,
5. விக்ரஹயோகம்,	

இவை முதலான விஷயங்கள் ஸங்க்ரஹிக்கப்பட்டுள்ளன.

எங்ஙனே யென்னில்;

1. * பொய்ந்நின்ற ஞானம் * இத்யாதியாலே அவித்யை முதலானவற்றைச் சொல்லுகிறவளவில், அசேதநவிஷயத்தில் இதுவே ஆத்மா என்கிற உணர்ச்சியும், அந்த தேஹாத்மாபிமாநத்தினாலே ஸாம்ஸாரிக துஷ்கருமங்களில் ப்ரவ்ருத்

ததீயாபிமாந, உபதேச விஷய, அந்யாபதேச ஹேத்வாதிகளும்

தியும், அக்கருமமடியாக வரக்கடவதான * நீண்டாவழும்பும் செந்நீரும் சீயுநரம்பும் செறிதசையும் வேண்டா நாற்றமும் மிகும் உடலோட்டைச் சேர்த்தியு மென்று அவற்றினுடைய ஸ்வரூபங்களும் ;

* பொய்ந்நின்ற ஞானமென்னும்படி விபரீத ஞானத்திற்கு ஹேதுவாயிருக்கையென்ன, ஸம்ஸாரத்திற்கு ஹேதுவாயிருக்கையென்ன, ஸ்வரூபத்தை மறைக்கையென்ன, * இனியாம்யாக்கை * என்கையாலே அவற்றின் அநாதித்வமென்ன, மூர் உபாதியடியாக வந்ததென்ன, * மயர்வற மதிநலமருளினன் * என்கையாலே நல்ஞானத்தால் அவை நிவர்த்திப்பிக்கக்கூடியவைகளா யிருக்கையென்ன—ஆக இப்படிப்பட்ட ஸ்வபாவங்களும் தெரிவிக்கப்பட்டிருக்கையாலே அவித்யாதிஸ்வரூப ஸ்வபாவங்கள் ஸங்க்ரஹிக்கப்பட்டனவாயின.

2. * இமையோர்தலைவா ! அடியேன் என்று திருவிருத்தத்திலும், * அதிபதி-அடிதொழுது * என்று திருவாய்மொழியிலும் சொல்லுகையாலே ஆத்மாவுக்கும் ஈச்வரனுக்குமுண்டான சேஷசேஷித்வரூபஸம்பந்தம் தெரிவிக்கப்பட்டதாதலால் ஆத்மேச்வரபந்தம் ஸங்க்ருஹீதமாயிற்று.

3. * உயிரளிப்பான்மெய்நின்ற யோனியுமாய்ப்பிறந்தாய் * என்று திருவிருத்தத்தில் அநேகாவதாரங்களைப்பண்ணி ரக்ஷிக்கும்படியைச் சொல்லுகையாலும் * மயர்வற மதிநலமருளினன் * என்று திருவாய்மொழியில் ஸம்ஸாரஹேதுவான அஜ்ஞானத்தைப்போக்கி உஜ்ஜீவனஹேதுவான ஜ்ஞாநபக்திகளைத் தன் அருளாலே தந்தபடியைச் சொல்லுகையாலும் எம்பெருமானுடைய ரக்ஷணக்ரமம் ஸங்க்ருஹீதமாயிற்று.

4, 5, 6. * உயர்வறவுயர்நலம் * என்று குணமும், * துயரறுசுடரடி * என்று விக்ரஹமும், * இமையோர் * அயர்வறுமமரர்கள் * என்று விபூதியோகமும் ஸங்க்ருஹீதங்களாயின.

7. * இமையோர் * என்றும் * அயர்வறுமமரர்கள் என்றும் அந்தஸூரிகளை முன்னிடுகையாலே ததீயாபிமாநம் ஸங்க்ருஹீதமாயிற்று.

8. * நின்று கேட்டருளாய் * என்று திருவிருத்தத்தில் எம்பெருமானை விளித்துக் கூறினபடியாலும், *தொழுதெழென்மனனே * என்று திருவாய்மொழியில் நெஞ்சைவிளித்துக் கூறினபடியாலும் ஆழ்வார் தம்முடைய உபதேசத்திற்கு விஷயபூதர்கள்—நெஞ்சுபோலே விதேயனான ஈச்வரனும், அப்படி விதேயரான அந்தரங்கஸ்ரீவைஷ்ணவர்களும், என்று தெரிவிக்கப்பட்டதனால் உபதேசவிஷயம் ஸங்க்ருஹீதமாயிற்று.

159931